XIII. B. 8.
MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS 41

உ

சிவமயம்.

# மாந்திரீக தீபம்.

இஃது

உலோகோபகாரார்த்தமாக

சென்னை வேப்பேரி,

இந்து ஆயுள்வேத ஔஷதசாலைத் தலைவர்

ப. சுப்பிரமண்ணிய முதலியார்

அவர்களின் நன்முயற்சியால்

சென்னை

மதருஸ் டைமண்ட் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copyright.

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS.90
1771

1913

இதன் விலை அணா 6.

உ

சிவமயம்.

# முகவுரை.

ஸ்ரீ சச்சிதானந்த சுயம்பிரகாச தேஜோன்மய ஸ்வரூபனும் அநாதி நின்மலனும் ஆதிமத்தியாந்தரகிதனும் அவாங் மனோகோசரனும் விளங்கும் நிரதிசயானந்தனாகிய பரமேஸ்வரன் ஆன்மகோடிகளுய்யும் வண்ணம் தனது அருமைத் திருவாக்கால் இருக்காதி சதுர்வேதங்களையும் அருளிச் செய்தனரன்றே, அவற்றில் அதர்வணமென்னும் நான்காம் வேதமானது சத்தகோடி மகா மந்திரங்களைத் தன்னுள்ளடக்கிய ஒன்பது சாகைகளையுடையது, அதிற் கூறிய ஒவ்வொரு மந்திரங்களின் சாதியையும், ஆண் பெண் அலியென்பதையும், அவற்றிற்குரிய தேவதையையும், பிரத்தியதி தேவதையையும், யந்திரத்தையும், பிரயோகிக்கவேண்டிய முறைமையையும், ஒருவன் குருமுகமாயறிந்து அநுஷ்டிப்பானாயின் அவனடையக்கூடிய நன்மையை யாவராற் சொல்ல இயலும். இது இங்ஙனமாயினும், இம்மந்திரங்கட்கெல்லாம் அதீதமாயும், விதிப்படி அநுஷ்டிக்கின் சாக்ஷாத் சிவபெருமானை நேரே காணக்கூடியதாயும், அவர் திருவருளை எளிதிலடைந் துய்யும்படியாயும் விளங்குவது அந்தப்பகவானது திருவருண் மேனி வடிவமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம். சேர்க்குந் துடி சிகாம் சிக்கனவா வீசுகா, மார்க்கும் மயகாம் பயகாம்—பார்க்கிலிறைக், கங்கிநகா மடிக்கீழ் முயலகனார், தங்கு மகாரமதுதான். என்று கூறிய திருவதிகை மனவாசகங்கடந்த தேவநாயனார் திருவாக்கானும், மந்திரநான்மறையாகி வானவர், சிந்தையுணின்றவர் தம்மையாள்வன, செந்தழலோம்பிய செம்மை வேதியர்க், கந்தியுண் மந்திரமஞ்செழுத்துமே என்றருளிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாக்கானும்; நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும், நமச்சிவாயவே நானறிவிச்சையும், நமச்சிவாயவே நாநவின் றேத்துமே, நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே, என்றருளிய திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கானும் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் சிவபிரான் திருமேனியென்றும், அதன் மகிமைகள் அளவிலாதனவென்றும் அறிக. ஆயினும் இம்மாந்திரீக தீபமென்னும் நூலின்கண் ஸ்ரீ பஞ்சாக்ஷர மகிமையையும் அதன் சம்பந்தமான அரியவிஷயங்களையும் கூறப்பட்டிருப்பதினால் இத்தகைய அருமைவாய்ந்த நூல் கற்றோர்க்கும், மற்றோர்க்கும் எண்ணிறந்த பெரும் பயனை அளிக்குமென்ற நன்னம்பிக்கையோடு பிரசுரித்தனன். இதனைக் கண்ணுறும் நண்பர்கள் இதன்படி அநுட்டித்து உலகிற்கு நன்மையைச் செய்து இகபர சுகசாதனங்களை அடையுமாறு ஜகதீசனை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்.

ப. சு. மு.


## ருது ஜெனன ஜாதகம்.

பெண்கள் ஜனனக்குறிப்புகளுடன் ருதுவாகும் வாரபலன் மாதபலன் லக்கினபலன் யோகபலன் கரணபலன் திதிபலன் நட்சத்திர பலன் இவைகள் யாவும் தாங்களே தெரிந்துகொள்ளலாம் விவாகங்களுக்குரிய பொருத்தங்களும் விபரமாய் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா 4.

# ஆருட சேகரம்.

இதுவரையில் அநேகவித ஆருடபுத்தகங்களை நாம்பார்த்திருந்தபோதிலும் அவைகள் யாவும் ஓர் மனிதன் கோரிவந்த விஷயத்தை உண்மையாய் அறிந்து சொல்லக்கூடாதவைகளாய் இருக்கின்றன. ஆதலால் யாம் அதிக பிரயாசைப்பட்டு சர்வ ஜனங்களும் சந்தோஷிக்கும்படி யானதும், உண்மையாய் ஆருடம் சொல்லக்கூடியதுமான ஓர் ஆருடம் தயார்செய்திருக்கிறோம். அது என்னவெனில் அதுதான் ஆருட சேகரமென்னும் நூல். இதில் அடங்கியுள்ளது ஒரேயொரு ஆருடமல்ல பற்பல ஆருடங்கள் சேகரித்துச் சேர்த்ததினால் இதற்கு ஆருடசேகரமென்னும் பெயர் கொடுக்கப்பட்டது. இந்த ஆருடத்தை ஒரு மனிதன் ஓர்தரம் வாசிப்பானாகில் அவன் ஆருடம்சொல்வதில் அதிகவல்லவனாவானென்பதில் யாதும் தடையில்லை.

இதில் அடங்கியுள்ள ஆருடங்களை விவரிப்பாம்.

| | |
|---|---|
| 1 இராசி ஆருடம் | 6 பிணியைப்பற்றிய பிரசனை ஆருடம் |
| 2 கிரக ஆருடம் | 7 விருடி பஞ்சபட்சி ஆருடம் |
| 3 கெவுளி ஆருடம் | 8 எழுத்தாணி நூலாருடம் |
| 4 திசையாருடம் | 9 நிமித்திகாருடம் |
| 5 இலக்காருடம் | 10 கௌசிகர் ஆருடம் |

ஆக 10-வித அருமையான நூல்களை ஒன்றுசேர்த்து ஆருடசேகரமென்னும் பேர் அமைக்கலாயிற்று

இது சகலருக்கும் உதவும்படியான புத்தகம் வியாபாரிகள், விவசாயிகள், உத்தியோகஸ்தர், பிரயாணிகள், சோதிடர் ஆருட அப்பியாசிகள் முதலிய யாவருக்தும் இன்றியமையாததால் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு அழகிய பயிண்டு செய்துள்ளது.

ஒரு புத்தகத்தின் விலை அணா 12.

## சோதிட சூத்திர விளக்க வினாவிடை.

சோதிட சாஸ்திரத்தைக் கற்கப் பிரியப்படுவோர்களுக்கு அதிக உபயோகமுள்ளது, இதில் குருசிஷியர்கள் இருவரும் தர்க்கம் செய்யும் விஷயங்களாலேயே சோதிட சாஸ்திரத்திலுள்ள சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளலாம். சகலருக்கும் சோதிட சாஸ்திரத்தை எளிதில் கற்பிக்கும் இதைப் போன்ற தர்க்கசோதிடம் அகப்படுவது வெகுபிரயாசை. அநேக சோதிட சாஸ்திரங்களை வாங்கி சோதிட சாஸ்திரத்தைக் கற்கமுடியாமல் விழிக்கும் நண்பர்கள் நிமித்தம் இந்த நூதன நூலை நாம் அச்சிட்டு வெளிப்படுத்தினோம், சோதிட சாஸ்திரத்தில் பிரியப்படுவோர்கள் யாவரும் இதைப் பார்க்க வேண்டிய தவசியம். தவிரசோதிடசாஸ்திரத்தைக் கற்றவர்களுக்கும் அதிக பிரயோசனத்தைத் தரத்தக்க நூலாகும். மேற்கண்ட புத்தகங்கள் தேவையாயின் சென்னை வேப்பேரி மணியன் அண்டு சன்ஸ் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு புத்தகத்தின் விலை அணா 6.

உ

கணபதிதுணை.

# மாந்திரீக தீபம்.

ஆதியாம் பராபரனைப் போற்றி செய்து
அம்மையவ ளுலகத்தோர் பிழைக்க வேண்டி
நீதியா மாந்த்ரீக சக்கரங்கள்
நிசமாக வுரையெனவே யதனைக்கேட்க
சோதியா முமையவளே நீ கேளென்று
சொல்லுகிறேன் பஞ்சாக்ர ரூபந்தன்னை
வாதியாம் பெரியோர்க்கும் புத்தியுள்ள
மன்னவர்க்கு மிதுவாகும் வகையைக்கேளே.

(இ-ள்.) ஸ்ரீகயிலாயத்தின்கண் சிவபெருமானும் பார்வதியாரும் தனியேயிருந்து உலகிலுள்ள ஆன்மகோடிக ளுய்யும் வண்ணமாக நான்கு வேதங்களினங்களாகிய ஆறு சாஸ்திரங்களைப்பற்றி ஒருவர்க்கொருவர் வசனிக்குங்காலத்தில், பார்வதிதேவியார் சிவபெருமானை வணங்கி சராசராத் மகங்கட்கெல்லாம் ஆதியாகியும் பராபரஸ்வரூபமுமாகியு முள்ளகடவுளே மிகவும் நீதிபொருந்திய பஞ்சாக்ஷர மந்திரங்களையும், அந்த மந்திரங்களிற்குறிய அக்ஷரங்களை அமைத்தற்கேற்றயந்திரமென்று சொல்லுகின்றசக்கரங்களையும், உலகத்திலுள்ளோர் தெரிந்து அனுஷ்டான வாயிலாக உய்யும் நிமித்தியமாக அடியவளாகிய எனக்கு உபதேசித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டகாலையில் பரமேஸ்வரன் மகிழ்ந்து மிகவும் பிரகாசிக்கின்ற இரத்தன பூஷணாலங்காரமுடைய எ உமையவளே உனது அபீஷ்டப்படி நீ கேட்ட பஞ்சாக்ஷர சொரூப லட்சணத்தையும் அப்பஞ்சாட்சரங்களை அமைத்தற் குறியசக்கரங்களையும், அதை அனுஷ்டிக்கவேண்டிய முறைகளையும், அதன் மகிமையையும் சொல்லுகிறோம் எத்தகைமையிலும் வாதஞ்செய்து ஜெயித்தற்குறியபெரியோர்களுக்கும் இவ்வுலகத்தை அரசு நடாத்தும் மஹாராஜாக்களுக்கும் இஃது உரிமையாகும் இதன் வகையாவது யாதெனில் கேட்பாயாக எ-று. (1)

வகையறியாக் கோபியர்க்குஞ் சண்டாளர்க்கும்
மனம்பிடியாக் காமியர்க்கும் பொய்ச்சீடர்க்கும்
திகழ்பெறவே வுபதேசஞ் செய்வாராகில்
சிறுவயதி லீனைவருங் குட்டநோயாம்
நகைபெறவே பயித்தியந்தான் ஞானப்பித்து
நானிலங்கள் மதியாது தரித்ரங்காணும்

குகையில்வளர் குறுமுனிவற் குபதேசித்தேன்
குமார சுப்ரமணியனுக்குங் கூறினேனே.

(இ-ள்) ஏ பார்வதா இப்பஞ்சாட்சர ரூபத்தை முன்பின் அறியாத கோபமுடையவர்களுக்கும் சண்டாளர்களாகியபாபிகட்கும் மந்திரங்களில் மனம் பிடியாத காமாதுரர்களுக்கும், உள்ளபடி உண்மையாய் நடவாது பொய்நடிப்பு நடிக்கும் சிஷியர்களுக்கும் உபதேசிக்கக்கூடாது. இப்பஞ்சாட்சர மறிந்த ஆசாரியர்கள் இவர்களுக்கு உபதேசிக்கின் உபதேசஞ் செய்தவர்களுக்கும் உபதேசம் பெற்றுக்கொண்டவர்களுக்கும் அந்தப் பொழுதிலேயே இருமல் உண்டாகும். குஷ்டவியாதி சம்பவிக்கும். யாவரும் நகைக்கும்படியாகிய பயித்தியம்பிடிக்கும். மெய்ஞ்ஞானமின்னதென வறியாதஞானப்பித்தத்தோன்றும் உலகத்திலுள்ளவர்கள் மதியார்கள். தரித்திரங்களையு மனுபவிப்பார்கள். ஆதலால் ஜன்மாந்திர சுகிர்தங்களால் இப்பஞ்சாட்சரங்களைத்தெரிந்தபுண்ணியர்கள் மந்திரங்களில் ப்ரீதியுடையவர்களுக்கும் புண்ணியமுடையவர்களுக்கும் நம்மீது அன்புடையவர்களுக்கும், உண்மையுடையவர்களுக்கும், குருலிங்கசங்கம் பக்தியுடையவர்களுக்கும் உபதேசிக்கவேண்டும். நாம் பொதியமலையில் வாசமாயிருக்கும், அகஸ்திய மஹாமுனிக்கு முதலில் உபதேசித்தோம். பிறகு நமது இளையபுதல்வன் சுப்பிரமணியனுக்கும் உபதேசித்திருக்கிறோம் எ-று. (2)

கூறுவே னஞ்செழுத்தின் பெருமை தன்னைக்
குவலயத்தி லுரைக்கவென்று லெளிதோபெண்ணே
மாறிலா வஷ்டகர்ம்ப மிதற்குள்ளாச்சு
மந்திரத்திற் கிதுவாதி வகை வேறில்லை
ஆறவே சிதம்பரமு மிதுவேயாகும்
ஐம்பத்தோ ரட்சரமு மடங்கிப் போச்சு
தேறினல் நாற்பத்து முக்கோணத்தின்
திறவுகோ லிதுவாகுந் தெளிந்துபாரு

(இ-ள்) எனது பிரிய நாயகியாகிய உமையே, இந்தப் பஞ்சாட்சரத்தின்பெருமையைச் சொல்லுகிறதானல் எளிதோ. அஷ்டகர்ம்மங்களுமிதற்குள்ளடங்கி யிருக்கின்றது சப்தகோடி மகா மந்திரங்களுக்கும் இது ஆதியாகும். இப்பஞ்சாட்சரந் தவிர அம்மந்திரங்களுக்கு வேறுவகையில்லை நடராஜப்பெருமான் நிர்த்தம்பண்ணுகின்ற சிதம்பரமுமிதுவாகும். அந்தச் சிதம்பர சக்கரத்திலடங்கிய ஐம்பத்தோரட்சரமும் இந்தப் பஞ்சாட்சரத்திலடக்கம் நாற்பத்துமூன்று கோணங்களின் பொருளை விளக்குவதாகிய திறவுகோலும் இந்தப்பஞ்சாட்சரமாகும் எ-று. (3)

பார்க்கவே யாறுவட்டம் நேரே கீறி
பரிவாகவாறுவட்டங் குறுக்கே கீறி
தார்ப்புறவே முனையடியிற் சூலமாறித்
தயவாக வெட்டுக்கும் விந்தை கட்டி

கார்ப்பிலா யநமசிவ சிவயநம நமசிவய
கருதரிய வயநமசி மசிவயநவென்று
சேர்ப்புறவே நாலாம் வீடதனில் மாறச்
செகந்தனிலே ஐம்பத்தோ ரக்ஷரமுமாச்சே.

(இ-ள்) இந்தப் பஞ்சாக்ஷரத்தை மாறும்வகை எப்படியென்னில், சதுரமாகிய மரப்பலகையிலேனு, செம்பு, வெள்ளி, பொன்முதலிய தகடுகளிலேனும் நேரே ஆறுகோடும குறுக்காக ஆறுகோடும் கீறிப்பார்க்கின் இருபத்தைந்து வீடாகும். அந்தந்தக் கோடுகளின் அடியிலிருந்து மூலைவரைக்கும் சூலமிட்டு அஷ்டதிக்கிலும் திக்குபந்தனம் கட்டி முதலேந்து வீடுகளில் முறையே யநமசிவவென்றும், அதற்குக் கீழுள்ள இரண்டாவது ஐந்து வீடுகளில் சிவயநமவென்றும், மூன்றாவதில் நமசிவயவென்று அக்ஷரங்களை அமைக்கவும், இப்படி யமைத்தல் ஒன்றுமுதல் ஐந்தீருயுள்ள வரிகளி லமைத்த நாலாவீட்டி னக்ஷரத்தை முதலாகவைத்து மாறினால் முற்கூறியபடி யமைக்கவரும். இவ விருபத்தைந்து வீடுகளி லமைதத அக்ஷரங்களோடு அகராதி க்ஷகாராந்தமாயுள்ள ஐம்பத்தோ ரக்ஷரங்களையும கணிதப்ரகாரம் அமைத்துக் காண்க இதன் முறையை இன்னும் ஆசாரிய வசனத்தானறிக எ-று. (4)

ஆச்சந்த யகாரத்தை முதலில்வைத்து
அந்தந்த எழுத்துவரை எழுதிக்கொள்ளு
நீச்சந்தநகாரத்தைக் கடையாமலமாற
நிலையான மோட்சத்தின் வழியேசேர்க்கும்
பேச்சான தும்பைப்பூ வடக்குமூலை
பெலமான வில்வகட்டை வெள்ளையாடை
ஆச்சான ருத்திராக்ஷம் தேங்காய்வெல்லம்
அருளான வுருவுதான் ஆயிரத்தெட்டே.

(இ-ள்) யகரமென்னும் எழுத்தை முதலில் எழுதி மற்ற எழுத்தக களை அதற்குப்பின் முறையே மாறிமாறி எழுதிக்கொள்ளு. நகரமென்னும் அக்ஷரத்தைக் கடைசியாக வைத்து உசசரிக்கின் சிவபதமென்னும் மோக்ஷத்தை உண்டாக்கும், இதை எப்படி உருவு கொடுக்கிறதென்றால் முற்கூறிய தகட்டி லெழுதிக்கொண்டு வெள்ளை வஸ்திரஞ்சாத்தி தேங்காய் வெல்லம் இவை முலியவைகளை நிவேதித்துத்தூபதீபந்தந்து ஆயிரத்தெட்டு தும்பைப்பூவேனும் ஈசானமூலைசென்ற வில்வமரத் துண்டாற் செய்த ஆயிரத்தெட்டு சிறு கட்டையேனும் கொண்டு தினந்தோறும் ஆயிரத்தெட்டு உரு செபிக்க எ-று (5)

எட்டான நகாரமுதல் வசியமாக
வினிதான புஷ்பமோ வில்வமாகும்
முட்டாவி சிகப்புதுகில் கிழக்குமூலை
முளகுசிவ மாம்பலகை முந்நூற்றெட்டு

தட்டாதே உருவேற்றி யெதிரிபேரைத்
தாமெழுதி யுன்பேரை மேலேமாறிக்
கட்டாகத் தகடெழுதிக் கையிற்கொண்டால்
கடும்பகைவன் கேள்வனுங் கண்ணிற்காணே.

(இ-ள்) உனக்குத் துன்பஞ் செய்பவனை நண்பனுக்கவேண்டில் ஓர் பலகையில்நமசிவயவென்றெழுதி தூபதீபந்தந்து கிழக்குமுலையிலுட்கார்ந்து சிவப்புவஸ்திரந் தரித்து தன்பெயரை அப்பலகையின்மேலேயும் எதிரியின் பெயரைக் கீழேயும்எழுதி முந்நூற்றெட்டுமிளகைக் கையில் எடுத்து ஒவ்வோருயிற்கு ஒரு மிளகைத்தள்ளிச் செபிக்கின் பொல்லாத பகையை யுடையவன் யாவனுனுலுஞ் சினேகனுவான். இப்படி நாற்பத்தெட்டுநாள் செபிக்கக் கைகூடும். இஃதன்றி செப்புத்தகட்டில் இம் மந்திரத்தையும் தன் பெயரையும் எதிரி பெயரையும் எழுதிக் கையில் வைத்துக்கொண்டு சதாகாலமும் 48-நாள் ஜெபிக்கவும். பகையான எதிரியானவன் சினேகனுவான் எ-று. (6)

கன்னியென்ற வகாரத்திற் கத்திக்கட்டை
கருத்தறியு மஞ்சள்துகில் மேற்குமூலை
உன்னிதமா யந்ததேவதைக்குப் பூசை
உத்தமமார் பாதிரிப்பூங் கொட்டையாகும்
வன்னியதன் பத்திரிதா னுருநூற்றெட்டு
வகையாக விப்படியே செய்வாயாகில்
சன்னிதியை விட்டுவந்து தெய்வமெல்லாம்
சாஷ்டாங்கஞ் செய்யுமது வசியமாமே.

(இ-ள்.) அத்திப்பலகையில் வயநமசியென்றெழுதி மஞ்சள்வஸ்திரஞ் சாத்தி மேற்குமூலையி லுட்கார்ந்து எந்தத்தேவதை வசியமாகவேண்டுமோ அந்தத் தேவதையை மனதில் நினைத்து பாதிரிப் புஷ்பத்தினுலும் வன்னி பத்திரத்தினுலும் அர்ச்சித்து நூற்றெட்டு ருத்திராக்ஷமணிகோர்த்த கோர்வையைக் கையில் வைத்துக்கொண்டு இம் மந்திரத்தைச் சொல்லி 48-நாள் தினம் 1இ 1008 உருவேற்றினுல் நினைத்ததெய்வங்களெல்லாம் வந்து நாம் ஏவின வேலைகளைச் செய்யும் எ-று. (7)

வசியமாஞ் சிகாரமுதல் சகலபூவாம்
மதுவாகு மிறைச்சியனம் வருணன்மூலை
நிசமான தாமரையின் மணிதானுவல்
நிலையான பலகையது நீலவஸ்த்ரம
தலையான வுருவைந்து நூறுபோடு
சகலபில்லி சூனியங்கள் தெரித்துப்போகும்
மலைமாதே பெரும்பாடு முடனேதீரும்
மங்கையற்கு மதலையுண்டா மலங்கிடாதே.

(இ-ள்) இன்னும் வசியத்தைப் பற்றிச சொல்லுகிறோம் கேள். நாகல் மரத்திலுற்செய்த பலகையில் சிவயநமவென்றெழுதி வருணதிக்காகிய மேற்றிசையிலுட்கார்ந்து இதற்கு எந்தப்பூவும் ஆமென்னு முறைமையால் எந்த மலரையாவதுசூட்டி நீலவஸ்திராலங்காரஞ்செய்து மா[illegible]சங்கலந்த அன்னத்தை நிவேதனஞ்செய்து தாமரைமணியினுல் தினம் ஒன்றுக்கு ஐந்து நூறு உரு ஷை சிவயநமவென்று ஜெபிக்க பில்லி சூனியங்கள் விட்டுபோகும். ஸ்திரீகளைப் பீடித்த [illegible]கவும் பொல்லாதாகிய பெரும்பாடு தீர்ந்து குழந்தையுமுண்டாகும் எ-று. (8)

மலங்காதே மகாரமுதல் அல்லிப்பூவாம்
வாகானகழிப்பேனம் பூசையாகும்
அலங்காதபேயத்திப் பலகைதானும்
அருநாபிமணியாகுந் தெற்குமூலை
சொல்லல்காணுந் தேற்றமொடு ஆயிபேரைத்
தொளாயிரத்தோடெட்டுதரஞ் சொல்லிப்பின்னர்
வலத்தோடு வாயிறனிற்கட்டினுலோ
மயக்குவிக்கும் பேய்ச்சாலம் மாண்டுபோமே.

(இ-ள்) பேயத்திப்பலகையில் மசிவயநவென்று எழுதி தென்மூலையிலுட்கார்ந்து அல்லிப்பூசசூடி நேற்றுமுந்நாளில் கழிப்புசசுற்றிப போட்ட மட்பாத்திரத்தில்வைத்து பசியவஸ்திராலங்காரஞ்செய்து பயறும் கோழிப்பிசசும் உப்புப்போடாது ஒன்று சேர்த்துச சமைத்து நிவேதித்து பிரமதண்டுவிரைத் தூபங்கொடுத்து, பசசை நாவிக்கிழங்கை உருண்டைசெய்துவைத்துக்கொண்டு மேற்காட்டிய மசிவயந எனபதை ஆயிரத்தெட்டுதரம் வுருவுகொடுத்து பார்வதியின்பீஜத்தை தொளாயிரத்தெட்டுதரம் செபித்து பின்பு அப்பலகையை வாயிற்படியில் கட்டிவைத்தால் பேயசசாலங்களெல்லாம் பறந்துபோம் எ-று. (9)

நீறுகுமஞ்சனத்தி லகப்படாது
நிலையானகர்மவித்தை நிகர்நில்லாது
கூறுனவறுமையது குன்றிப்போகும்
குருவாகச்சொன்னவரை யன்போடேத்து
வாறுனகுருபற்றை மறந்திடாதே
வஞ்சனைக்குங் களவுக்கும் பேரெடாதே
தேறுனகோடிவித்தை யாடிப்பாரு
செப்பினே னிதுவகையைத் தெளிந்துபாரே.

(இ-ள்) இந்தப் பஞ்சாக்ஷர வுச்சரிப்பினுற் செயயுங் காரியங்கள் அஞ்சனத்தினுற் காணமுடியாது. கர்மமாகிய பாவஙகளைச செய்யுங் கருவைக்கொண்டு செய்யும் வேலைகள் முன்னிற்காது தாரித்திரம் நீங்கிப்போகும். உனக்குபதேசித்த குருவைமாத்திரம் நித்தியம்மறவாது அன்போடும்போற்

றிக்கொண்டிருவஞ்சனை செய்பவனென்றும் திருடனென்றும் பேரெடா தே இதனுற் கோடானுகோடி வித்தையாடிப் பேரெடுக்கலாம். இது வரையிற் கூறியவைகளை நன்ருக ஆராய்ந்துபார் எ-று. (10)

தெளிவான பஞ்சாக்ஷரத்தின்கூற்றைத்
திறமாகவந்தபடி முறைதப்பாமல்
வெளியாக ஆடுதற்கு வுன்னிப்பாரு
வேருன மந்திரமும் விரும்பவேண்டாம்
ஒளியானசோதியெனு முமையவட்கு
ஓதிவைத்தரறிவுள்ள வுலகமாந்தர்
நளியாகக்காணுகிற குணங்களெல்லாம்
நானிலத்திலுரைக்கின்றே னயந்துபாரே.

(இ-ள்) மிகவும் தெளிவுபொருந்திய பஞ்சாக்ஷரத்தின் கூறுபாடுகளை யெல்லாம் முறைபிசகாமல் நாம்சொல்லிய கருத்தின்பிரகாரம் வெளிப்படையாய் நீ வேலைசெய்வதற்கு நன்ருயாராய்ந்துபார்த்து செய்வாய் இந்தப் பஞ்சாக்ஷரத்தைவிட வேறொருமந்திரங்களை நீ விரும்பவேண்டியதில்லை இப்படி யென்று பரமேஸ்வரன் தமது சத்தியாகிய பார்வதிதேவியாருக்கு முன்காலத்திற் சொல்லினர், உலகத்திலுள்ள அறிவுடைய மானிடர்கள் செய்கின்ற மந்திரத்தின் குணங்களையெல்லாம் சொல்லுகின்றேன் கேள் எ-று. (11)

பத்தியுடன்பார்வதியைப் போற்றிசெய்து
பரிவானகுறுமுனிதான் பாருளோர்க்குச்
சத்தியமாய்முறைப்பாடு ஏவல்பில்லி
சயித்தானும்தெய்வகுற்றம் சரீரதுன்பம்
முத்தியென்றகுறிகுணங்கள் நீங்குநேரம்
முறைமையுடன்சொல்லென்று முன்னிக்கேட்க
வத்துவென்ற வுமையவள்தான் மனமகிழ்ந்து
வண்மையுடன் வையகத்தின்வகைசொன்னுளே.

(இ-ள்) பொதியமலையில் வாசஞ்செய்கின்ற மிகவும் தபசிரேஷ்டராகிய அகஸ்திய மகாமுனிவரானவர் மிகவும் அன்புடன் பார்வதிதேவியைத் துதிசெய்து அம்மணி உலகத்திலுள்ளமானிடர்கள் அனுபவிக்கும் பெரும் பாடு ஏவல் பில்லி சயித்தான் தெய்வகுற்றம் சரீரபீடை ஆகிய இவற்றின் குறியும் குணமும் இவைகள் நீங்குங்காலமும் முறைமையுடன் சொல்லுவா யென்று விண்ணப்பஞ்செய்து கேட்க அதற்கு உமையவள் மனமகிழ்ந்து உலகத்தார்களெல்லாம் உய்யும்படி திருவாய் மலர்ந்தருளினுள் எ-று (12)

வகையென்றுபொய்ச்சத்யம் செய்தபேர்க்கு
மாடுகன்றுபிள்ளைகள்சாம் வலக்கைசோரும்

நகையானகண்கள்கெடு முயிரும்போகும்
நலிந்தக்குணங்கள்கண்டால் நடுச்சந்திக்குள்
தொகையான மனோன்மணியைப் பூசைசெய்து
சூத்திரமாய் வைரவ சக்கரத்தைக்கொண்டு
சிகையாகக்காரீயத் தகட்டில்கீறி
சிவசிவா வென்றுசொல்லிச் சிரசில்கட்டே.

(இ-ள்) ஐயா அகத்தியமுனிவரே பொய்ச்சத்தியம் சொல்லிய சண்டாளருக்கு மாகேள் கன்றுகள் சாகும். வலதுகை விழுந்துபோகும் கண்கள் கெட்டுக் குருடாகும் உயிரும் போய்விடும். இப்படிப்பட்ட கெட்ட குணங் காணுமாயின் நாற்சந்தி கூடுமிடத்தில் காரீயத்தகட்டில் வைரவசக்கரம் எழுதி மனோன்மணியைப் பூசைசெய்து சிவசிவாவென்னும் மந்திரத்தைச சொல்லிக் குடிமியிற் கட்டவேண்டும் எ-று. (13)

கட்டடா பேயினது முறைமையைக்கேளு
காணுகிறகுணங்காணுங் கருத்தில்சொல்வேன்
இஷ்டமுடன்பெண்களை யாண்ரூபமாக்கு
மினிதான ஆணுல் மோகினியைக்காட்டும்
நட்டிரவில்வாய்பிதற்றும் கருவழிக்கும்
நளிர்சுரங்கள் பெரும்பாடு நடுக்கும்பித்தம்
முட்டெனவே பெண்புருஷன் கூடிவாழாள்
முறைமையுட னதுபோகும் முறையைக்கேளே.

(இ-ள்) பேய்பிடித்த பெண்களின் குறியுங் குணமும் எப்படி யிருக்குமெனில் கருத்தாகச சொல்லுகிறேன் கேள். பெண்ரூபத்தை ஆண்ரூபமாகித் தேகத்தை உலரும்படிச செய்யும். ஆண்புருஷர்களைப் பேய்பிடித்ததாணுல் மோககன்னியாய் வந்து அவர்களைப் பிடித்து இந்திரிய நஷ்டஞ்செய்யும். வாய் பிதற்றும்படிச் செய்யும். ஸ்திரீகளைக் கருவழிக்கும். நளிர்சுரங்காட்டும். பெரும்பாடு உண்டாகும், தேகத்தை நடுக்கும், பித்த உபரி உண்டாகும். ஆணுடன் பெண்ணும், பெண்ணுடன் ஆணும் கூடிவாழவொட்டாது செய்யும். இந்தத் துர்க்குணங்களை உண்டாக்கும் பேய் நீங்கு முறைமையைச சொல்லுகிறேன். கேட்பாயாக எ-று. (14)

கேளடாபசாசினது பலத்தைப்பார்த்துக்
கிளர்பஞ்சாக்ஷரத்தினது கிருபைநோக்கி
ஆளடாகோழிபன்றி யாடுகாவு
ஆஇஅரிஓம் உருவைந்நூறுபோடு
தாளடாகாரீயம் செம்புதங்கம்
தகடெழுதி யிடைக்கழுத்தில் சிரசில்கட்ட
பாளடா அலகையென்ற பேய்களெல்லாம்
பறக்குமடா பிரமராக்ஷசும்பாரே.

(இ-ள்) ஐயா குறுமுனியே மனிதர்களைப் பிடித்துப் பீடிக்கும் பேயினது வல்லபத்தையும் குணத்தையும் பார்த்து பரமேஸ்வரனது திருவடிகளை மனதினுல் அன்புடன் தியானித்து முற்கூறிய பஞ்சாக்ஷரத்தினது கிருபையைநோக்கி எது எந்தவித மாற்றியிருக்கிறதோ எது எந்தப்பேய்க்குரியதோ அந்தப் பஞ்சாக்ஷரத்தைக் காரீயத்தகடு ஒன்று செப்புத்தகடு ஒன்று தங்கத்தகடு ஒன்று இந்த மூன்று தகட்டிலும் எழுதி அதனுடன் ஆ இ அரிஓம என்பதும் சேர்த்தெழுதி தூபதீபந்தந்து கோழிபன்றி ஆடு காவுகொடுத்து ஆ இ அரிவோம் என்னும் பீஜாக்ஷரத்தோடு ஐந்நூறு உருவுகொடுத்து கழுத்திலாவது சிரசிலாவது கட்ட பேயும் பிரமராக்ஷசும் பறந்துபோகும். இதைமிகவும் கவனித்துச் செய்துபார் எ-று. (15)

பாருமுறைப்பாடினது குணத்தைக்கேளு
 பரிவானசரீரமது வூதல்காணும்
சேரகடுதீக்கடுப்பு மயக்கம்பித்தம்
 சீறிருமல்வயிறுவலி சிரசுநோவாம்
போரகத்திலாந்தைவரும் காவல்காரன்
 பிராமணன்போல்காணுமடா பிறந்தோர்சாவார்
ஆரடாயெந்தனைப்போல் சொல்வாருண்டோ
 ஐம்பதனில் சுருக்கிவிட்டேன் அருளால்தானே.

(இ-ள்) முறைப்பாட்டினது குணத்தைச்சொல்லுகிறேன் கேள். சரீரம் ஊதும் வயிறுகடுக்கும் மயக்கமும் பிதற்றலுமுண்டாகும். இருமும் வயிறு வலிக்கும் தலைநோகும் வீட்டில் ஆந்தைவந்து கூவும் காவல்காரன் பிராமணனைப்போலக் காணப்படுவான், கூடப்பிறந்தோர் இறப்பார்கள். இந்த முறைமைகளையெல்லாம் ஐம்பது கவியில் சுருக்கிக் கூறினேன். என்னைப்போல சொல்வாருண்டா அகத்திய முனிவரே எ-று. (16)

தானடாஅநுமனது சக்ரங்கீறி
 சவாதுமுதல்மஞ்சள்விரை அபிஷேகஞ்செய்
தேனென்றகருடனுடன் காக்கைக்கூடும்
 திறமானதூக்கணன் குருவிக்கூடும்
வானென்றமுளகாய்நெய் வார்த்துவேள்வி
 வளர்த்தடா யேழுருபிச்சைத்தண்ணீர்
கோனென்ற அறிசியிட்டுச் சமைத்துக்கொண்டு
 கும்பமாய்க்கழிப்பிட்டுக் குறித்துக்கேளே.

(இ-ள்) ஆஞ்சநேயனது சக்கரத்தைத் தகட்டிலெழுதி சவ்வாதுமஞ்சள் முதலிய வாசனைப் பொருள்களால் அபிஷேகஞ்செய்து தூபதீபந்தந்து கருடன் காக்கை தூக்கணன் குருவி இவைகளின் கூண்டுகளையும் முளகாயை யும்சமிதையாகக்கொண்டு நெய்விட்டு யாகஞ்செய்து எழு ஊருக்குப்பேரய்

தண்ணீர் பிச்சையெடுத்துவந்து அத்தண்ணீரில் அரிசியிட்டுச சமைத்து அனேதத் தகட்டின் முன்வைத்து கும்பம்போட்டு கழிப்பெடுக்கவேண்டும். அதுவன்றி இன்னும் சொல்லுகிறேன் கேள் எ-று. (17)

குரிமையுள்ள சத்துருகையன்னம்வாங்கிக்
கூடியுண்ணமக்கள்பெண்டீர் குலத்துள்ளோரும்
தரிசுடனேசெய்தமுறைப் பாடுந்தீரும்
சத்துருக்கள்சயித்தாலுஞ் சாருமோதான்
அரிசிவநமயவென்று ஐந்நூற்றெட்டு
அழகானதகடெழுதி உருவையேற்றில்
கரிசலுள்ளகருமமெல்லாம் மங்கிப்போகும்
கர்த்தனதுபாதத்தைக் கருத்தில்வையே.

(இ-ள்) சத்துருக்கள் தலை வாயலில் மாறுரூபங்கொண்டு அன்னபிக்ஷை யெடுத்துவந்து பிள்ளைகளுடனும், பெண்சாதியுடனும் பந்துக்களுடனும்கூடியுண்ண அதனைல் அவர்களேவிய முறைப்பாடுதீரும் சத்துருக்கள்சாபந்தந்தாலும் அது உன்னைச சாராது பஞ்சலோகங்களில் எந்த லோகத்தாயினும் செய்ததகட்டில் சக்கரங்கீறி அ-ரி-சி-வ-ந-ம-ய என்று எழுதி அதற்குத் தூபதீப நைவேத்ய ஆராதனை செய்து ஐந்நூற்றெட்டு உருவு கொடுத்து ஆஞ்சநேயரது சீர்பாதத்தையும் சிவபிரானது பாதத்தையுந் தொழுதால் உனது பாவகர்மங்களெல்லாம் அகன்று சுத்தனுய் விடுவை எ-று. (18)

வையடாஏவலது குணத்தைக்கேளு
மனைதனிலேகல்லுவிழும் வலக்கைசோரும்
பையவேசரீரமது குத்தல்காணும்
பலவிதமாய்ரோகமிஞ்சி மனம்பேதிக்கும்
அய்யமின்றிநாய்பூனை காலிமக்கள்
அழிவாகும் ஆக்கினகூழ் ருசியிராது
நையவேவந்தகர்மந் தீரவேண்டில்
நயமாகச்சொல்லுகிறே னயந்துகேளே.

(இ-ள்) ஒ அகத்தியமுனியே ஏவல்குணத்தைச சொல்லுகிறேன் கேள் வீட்டில் கற்கள் விழும் வலதுகை சோர்ந்துவிழுந்துவிடும். சரீரமெல்லாம் குத்தலுண்டாகும். இப்படிக்குப் பல வியாதி சம்பவித்து மனது மிகவும் பேதிக்கும். இதன்றி வளர்க்கும் நாயும பூனையும் மாடுகளுஞ் சாகும். நெருங்கின பந்துக்களும் இறப்பார்கள் சமைத்த சாதமும் ருசியிராது. இந்த ஏவல் கர்மந்தீரவேண்டினல் அதற்குரிய விதத்தைச் சொல்லுகிறேன் எ-று. (19)

நயந்துதான்மயானத்தி லிருந்துகொண்டு
நயமாகக்கிலி ஓம் ஆம் என்றுதானே

துயர்ந்துமே ஆயிரத்தெட்டுருவுபோட்டு
சுகமானநாயுருவி மூலம்வாங்கி
பயந்துநீபோகாமல் பட்டுநூலால்
பாங்கானகுலிசமொன்று பண்பாய்ச்செய்து
உயர்ந்ததொருகழிப்பிட்டு மயானச்சாம்ப
லுருச்செய்துவாசல்நே ருயரக்கட்டே.

(இ-ள்.) ஆதிவாரம் காலையில் ஒருவர் முகத்தில் விழியாது போய் நாயுருவிச்செடிக்குத் தூபதீபங் கொடுத்து சிவ சிவ யென்று சொல்லிக் கொண்டே அச்செடியைப் பிடுங்கி அதன் வேரைவாங்கி மண்ணைத்தட்டிப் பால்வார்த்து கழுவிப் பட்டுநூலால் முற்றிலும் சுற்றி வீட்டுக்கு வந்து மத்தியானம் அதற்குப் பூசைபோட்டு பொங்கலிட்டு இரவு 12½-நாழிகைக்கு மசானம்போய் மயானச் சாம்பலையெடுத்து கோசலம்விட்டு ஆண்பாவை பெண்பாவை செய்து ஒன்றற்கொன்று அதனதன் பக்கத்தில் மாறிவைத்து அப்பாவையின் உபஸ்தங்களிலும் மார்பிலும் சிரசுகளிலும் கற்பூரம் ஏற்றி வைத்து நாயுருவிக் குலிசத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஊதுவத்திப் புகையுமிட்டு கிலி ஓம் ஆம் என்று ஆயிரத்தெட்டுருவுபோட்டு குலிசத்தை எடுத்துவந்து வீட்டுவாசலுக்கு நேராக உயரமான இடத்தில் கட்டு எ-று. (20)

கட்டடாகர்மமெல்லா நீங்கிப்போகும்
கனமானமாந்த்ரீகர் மயங்கிபோவார்
எட்டடாகர்மமெல்லா மிதற்குள்ளாச்சு
என்மகனேயென்சொல்வே னிந்தவித்தை
அஷ்டதிசைபோனாலு மகப்படாது
ஆதிபரனெனக்குரைத்தா ருனக்குச்சொன்னேன்
திட்டமுடன்சூநியத்தின் குணங்கள் தன்னைத்
திரமாகச்சொல்லுகிறேன் றெளிந்துகேளே.

(இ-ள்.) இப்படியாக வாயிலுக்குநேராககட்டினால் கர்மபலனெல்லாம் நீங்கிச் சுத்தனாவான், எப்பேர்பட்ட மந்திரவாதிகளு மயங்கிப்போவார்கள் எல்லாக்கர்மங்களு மிதிலடங்கியிருக்கிறது. அகத்தியமுனிவனே! இதன் வித்தையை யென்னசொல்லப்போகிறேன். நீ அஷ்டதிக்கிலும் போனாலும் இதைப்போலுனக் ககப்படாது. சாக்ஷாத் பரமேஸ்வரனெனக் கநுக்கிரகம்பண்ணினார். அதை யுனக்குபதேசித்தேன் இன்னும் சூனியத்தின்குணத்தைஉனக்குச் சொல்லுகிறேன். அதையுங்கேளென்று உமயவள் சொலினாள். (21)

தெளிவானசூரியந்தான் வைத்தவீட்டில்
தெரிவையர்க்குக் கர்ப்பந்தானழிந்துபோகும்
வலிவானமாடாடு கன்றுசாகும்
வைத்திருக்குந்தென்னைபனை முருங்கைசாகும்

தெளிவானசிறுமுழந்தை யாசான்சாவான்
தேவநஞ்சைபுஞ்சையெல்லாம் பாழாய்ப்போகும்
எளிதானகர்ம்மஸ்தைதைத் தானீக்க
வென்றாலோ மையொன்றையியம்புவேனே.

(இ-ள்,) அப்பா! அகத்தியமுனிவனே சூனியம் வைக்கப்பட்டு அதனால் வருந்துங்குணங் குறியானது எத்தன்மையாதெனில், பெண்களுக்குக் கர்ப்பம் அழிந்துபோகும், மாடு ஆடு கன்று இவைகள் சாகும், தென்னைமரம் முருங்கைமரம் சாகும், சிறுகுழந்தை இறக்கும், ஆசான் இறப்பான், தேவதா நஞ்சைபுஞ்சை நிலங்களெல்லாம் விளையாது பாழாய்ப்போகும், இவைகள் மிகவும் இலேசான கர்மமாகும் இந்தச் சூனியத்தை எடுக்கவென்றால் மையொன்று சொல்லுகிறேன்கேள்-எ-று. (22)

மையானஉடும்பீறல் ஆமைபிச்சம்
மகத்தானதேவாங்கு வலதுகண்ணும்
மெய்யானகாக்கையின்ற னீரல்தானும்
விளம்புகிறேன் சுகந்தரிதனீரலோடு
கையானற்றகரைரசம் விளக்குச்சீலை
கண்ணிரண்டுபட்டசட்டிக் குள்ளேவைத்து
பையானவேம்பினது தீயினாலே
பதமாகக்கருக்கியதை இறக்கிடாயே.

(இ-ள்) அதற்கு மையாவது யாதெனில்உடும்பினீரல், ஆமையின்பிச ,தேவாங்கின்வலதுகண், காக்கையீரல், மூஞ்சூரினீரல் இவைகளை எடுத்துக்கொண்டு மேற்புரம் இரண்டு சில்லிவாயந்த ஒரு சட்டியில்போட்டு கையான்தகரைச்சாறுவிட்டு அடுப்பின்பேரில்வைத்து வேம்பின்விறகால் கருக்கிப்பதமாக இறக்கிக்கொள்-எ-று. (23)

இறக்கியதைத்தேன்விட்டே யாட்டிக்கொண்டு
இயல்பானமுக்கண்ணைப் போற்றிசெய்து
குறுக் கியேகொம்பினது பரணிக்குள்ளே
கூட்டிவைத்துவேண்டினால் வெத்திலையில்போட்டு
சரக்கலிலாசாம்பவியைப் போற்றிசெய்தால்
சத்தலோகங்களெல்லாந் தெளிவாய்காணும்
மறக்கிநீபோகாதே சூனியந்தன்னை
வைத்தவிடம்பார்த்துநீ யெடுத்திடாயே.

(இ-ள்) இப்படி இறக்கிக்கொண்டு தேன்விட்டரைத்து மூன்றுகண்ணையுடைய சிவபிரானை போற்றிசெய்துமாட்டுக்கொம்பின் பரணியில் போட்டுவைத்துக்கொண்டு வேண்டும்போது இராக்காலத்தில் விநாயகப் பெருமானுக்

குப் பூசைபோட்டு தூபதீபந்தந்து சாம்பவியையும் பிரார்த்தித்து வெற்றிலையில் அந்த மையைப்போட்டு பார்த்தால் அஷ்ட மைஓடும் ஓட்டத்தால் சத்தலோகங்களும் வெட்டியாகத்தெரியும் சூனியம்வைத்திருக்கும் இடத்தைக்கண்டுபிடித்து எடுத்துவிடலாம்-எ-று (24)

எடுத்திடவே திசைக்கட்டு தன்னைக்கட்டு
இனிதாம்பஞ்சாக்ஷரத்தை இடையில்கட்டு
கொடுத்திடவே முப்பலி சாராயம்கள்ளு
கொழுக்கட்டையிவையிரண்டு கோடிவஸ்திரம்
தடுத்திடுகீகழிப்பிட்டு மயானந்தன்னில்
தள்ளியே அக்கினியால் கொளுத்திபோட்டு
உடுத்தவஸ்திரத்துடனே வீட்டில்வந்து
உத்தமியைப்பூசைசெய்தே உறுதிபண்ணே

(இ-ள்) அப்படி அந்த சூனியத்தை எடுக்குங்காலத்தில் உன்னைத் திசை கட்டு கட்டிக்கொண்டு பஞ்சாக்ஷரத்தை மத்தியில் கட்டிக்கொள்ளு. ஆடு, கோழி, பன்றி, இவைகளைப் பலிகொடுத்து கள் சாராயம் கொழுக்கட்டை, ஆண் பெண்பாவை கோடிவஸ்திரம் இவைகளினால் அவ்விடத்தில் சூனியத்தினால் பீடிக்கப்பட்டவனுக் கழிப்பெடுத்து அங்கு வைத்திருக்கும் சூனியவஸ்துக்களையும் நீ கழிப்பெடுத்த வஸ்துக்களையும் ஒரு பழமுறத்தில் வைத்து அர்த்தராத்திரியில் சுடுகாட்டுக்குப் போய் இவைகளை அக்கினியில்கொளுத்திப்போட்டு இடையிற்கட்டிய வஸ்திரத்தோடு குளத்தில் 108 தரம்முழுகி வீட்டிற்குவந்து சாம்பவியைப் பூசைசெய்து சிவநமயவென்று 1008-உருவுகொடுத்து ராக்ஷாபந்தன மொன்றைச் சூனியத்தினாற் பீடிக்கப்பட்டவனுக் கட்டச் சகலதோஷமும் பரிகாரமாம் எ-று. (25)

பண்ணப்பாயிப்படிநீ செய்வாயாகில்
பறக்குமடா பில்லி சூனியங்களெல்லாம்
திண்ணப்பாவுருச்செய்த சாம்பல்தன்னை
தீராதகருமமெல்லாம் தெறித்துப்போகும்
எண்ணப்பாயிந்தவித்தை மனதுக்குள்ளே
யெங்கெங்குந்தொழிலதுவு மிதற்கீடல்ல
வெண்ணப்பா தொட்டியங்கள் சல்லியங்கள்
விரித்துப்பாரிதைப்போல விளங்கிடாதே

(இ-ள்) இந்த விதமாக நீ செய்யும் பக்ஷத்தில் பில்லி ஏவல் சூனியம் யக்ஷணி குட்டிச்சாத்தான் மாடன் கருப்பன வீரன் முதலியவைகளால்வரும் தீங்குகளெல்லாம் நீங்கிவிடும் அந்த ஓமம் பண்ணிய சாம்பலை நீ தின்னவேண்டும். அப்படி நீ தின்னும் பக்ஷத்தில் தீராதகர்மமெல்லாம் தீர்ந்துவிடும் இந்த வித்தையை மனதிற்குள்ளேயே எண்ணிக்கொண்டிரு எங்கெங்குந்த

தொழிலு மிதற்கு நிகரல்ல தொட்டிய வித்தையும் சல்லிய வித்தையுங்கூட இதற்கு நிகராகமாட்டாது எ-று. (26)

விளங்கியதோர் கழிப்பிலகப்பட்டபேர்க்கு
வெளிறுகச்சரீரமது வூதல்காணும்
இளங்கவேயிடுப்புவலி பிடரிநோவாம்
இக்குணங்கள் காணினர் தக்கருமந்திர
முளங்கியதோ ராதித்த வாரநாளில்
முளகாய்நெய்சமுத்துடனே துவரைக்கூட்டி
அளுங்கிலாகோதுமையும் எள்ளுஞ்சேர்த்து
ஆயிபதந்துதித்தோமஞ் செய்வாய்நீயே.

(இ-ள்) கழிப்பிலகப்பட்டபேர்களுக்குச சரீரம் வெளுக்கும், ஊதும், இடுப்பும் பின்கழுத்தும் நோகும், இந்தத்திய கரும வினைக்குப் பரிகாரம் யாதெனில், ஆதித்தவாரமாகிய ஞாயிற்றுக்கிழமையில், இராத்திரி 9-நாழிகைக்கு முளகாயும் நெய்யும் தேய்த்து ஆல் அரசு வேய்பீரக்கு நுறுப்பட்டை சுரைக்கொடி எருக்குநரம்பு ஆகிய இத்தசசமுத்துடன் துவரை, கோதுமை, எள்ளு இவைகளையுங் கூடக்கூட்டி சங்கரியைப்போற்றி ஓமஞ்செய்து எ-று.

சேர்த்துநீஓமஞ்செய் சாராயங்கள்ளு
செஞ்சாவல்பலிகொடுத்து சிவனார்மூலம்
சேர்த்தப்பாகருநூலால் குலிசங்கட்டி
குங் கங் வங்கென் றுருவைக்கொடு நூற்றெட்டு
பார்த்தப்பாவுருச்செய்து இடையில்சட்டப்
பறந்தோடும்கழிப்பதனால் வந்ததோஷம்
ஆத்தப்பாசரீரமது சுத்தியாகும்
ஆருமெந்தனைப்போலே யறிவிக்காரே.

(இ-ள்) இவைகளையெல்லாம் ஒன்றாகக்கூட்டி ஓமஞ்செய்து சாராயமும் கள்ளும்வைத்து சிவந்த சேவற்கோழி பலிகொடுத்து சிவனார் வேம்புக்குக் காப்புகட்டி பூசைசெய்து ஆதிவாரத்தில் வேரைப்பிடுங்கி கருநூலால் சுற்றி, குங்கங் வங் என்று 108-உருவுகொடுத்து தூபதீபங்கொடுத்து இடுப்பில் கட்ட கழிப்பினால் வந்த தோஷம நிவர்த்தியாகும். சரீசுத்தியாகும். இந்த மர்மங்களை என்னைப்போல் ஆர்தான் வெளியிடுவார்கள் எ-று. (28)

அறிந்திடவேயின்னுமொரு சேதிகேளு
அரிவையர்க்குத் தூரதிஷ்டியானசேலே
குருந்திடவேபருந்துகொண்டு கூட்டில்சேர்த்தால்
கோதையர்க்குக் கெர்ப்பந்தானழிந்துபோகும்
மருந்திடவேதிரேகமது வெளுத்துபோகும்
மாதவிடாய்வரும்போது வயிற்றில்நோவாம்

MAH: MAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS

செரிந்திடவேயிடுப்புவலி காணுநாதன்
தீமையாமறுபுருடன் போலேகாண்பார்.

(இ-ள்) அப்பா அகத்தியமுனியே இன்னுமொரு சேதிசொல்லுகி றேன் கேட்பாயாக மாதர்கள் ரஜஸ்வலையானசேலையைப் பருந்துகவ்விக் கொண்டு தான் கட்டின கூட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்தால் அம்மாதர் களுக்குக் கருப்பநாசமாகும். திரேகம் வெளுக்கும், மாதமாதம் பைஷ்டி யாகும்போது வயிறுநோகும், இடுப்புவலிக்கும் தன்புருஷன் பரபுருஷன் போல தோன்றக் காண்பார்கள் எ-று. (29)

கேளப்பாநாயுருவி வன்னிகாட்டம்
கெடியானகோழிபிச்சி கருடன்கூடு
வாளப்பாமாம்பிஞ்சு ஆவிநெய்பால்
வளர்த்தடா யெக்கியத்தை மந்தவாரம்
நாளப்பாமஞ்சளஞ்சு வித்தைகூட்டி
றம்றம்வென்றேசொல்லி யுருநூற்றெட்டு
வேளப்பாமஞ்சளதை யீந்தாயாகில்
வெண்கருடன்தோஷமது விலகிப்போமே.

(இ-ள்) இதற்குப்பரிகாரம் யாதெனில், நாயுருவிவிறகு வன்னிச முத்து கோழியின் பிசசு கருடன் கூடுகட்டிய சுள்ளி, மாம்பிஞ்சு இவைக ளால் சனிக்கிழமைதினம் பசும்பாலும் நெய்விட்டு ஒமஞ்செய்து ஐந்து மஞ்சள் கையிலெடுத்துக்கொண்டு றம் றம் என்று 108-உருவுகொடுத்து அம்மாதர்களுக்குக் கொடுப்பாயாகில் இந்தக் கருடதோஷம் நிவர்த்தியா கும்-எ-று (30)

வினைபோகுநாகத்தால் வந்ததோஷம்
விளம்புகிறேன்கன்னியற்கு மேனிவாடும்
கனமானகுளிநின்று கறைந்துபோகும்
கைகாலுஞ்சோரவருங் கனவுகாணும்
நினைவானவுறக்கவருந் தீரவென்றால்
நெல்லிவன்னிநுணைப்புங்கோ ளெட்டியீந்து
யனேசித்துமுடன்கூட்டி யோமஞ்செய்க
வரிசையுடனஞ்சுக்ர வாரந்தன்னில்.

(இ-ள்) நாகசர்ப்பத்தாலவந்த தோஷத்தின் குணத்தைச் சொல்லுகி றேன்கேள். மாதர்களுக்குச் சரீரம்வாட்டமுறும் குளிநின்று கரைந்து விடும், கைகால்கள்சோரும். காணாத கனவுகாணும் அதிக தூக்கம்வரும். இந்தத்தோஷம் நீக்கவேண்டுமானால் சுக்கிரவாரத்தன்று நெல்லி, வன்னி, நுணா, புங்கு, எட்டி ஈந்து இந்தச்சமூத்துகளோடு மனேசித்து என்கிற கடைச்சரக்கையுங்கூட்டி ஓமஞ்செய்து-எ-று. (31)

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



வாரமென்றே அரைக்கின்ற மஞ்சள்வாங்கி
வயநமசி அங்கு இங்கு சிங்குவென்று
பாரமென்றவுருவீயு மெண்ணூற்றெட்டு
பட்சமுடன்செய்துமஞ்சள் பரிதாயிய
நேருமென்றநாகத்தின் தோஷம்நீங்கும்
நேரிழைக்குகெர்ப்பமது நிற்குமப்பா
கோரமென்ற மாரியம்மன் கோவிலுக்குக்
குணமானவிளக்கிருபத்தேழுவையே.

(இ-ள்) நல்லகுணமும் நிறமுமிக்க இருபத்தேழு விரல் வடிவமாகிய ஐந்துபலம், மஞ்சள்வாங்கி, வயநமசி அங் இங் சிங் என்று எண்ணூற்றெட்டுரு வுகொடுத்து 27-நாள் பூசும்படிசெய்து ஸ்நானம்செய்வித்து விபூதியணிவித்து மாரியம்மன் கோவிலைக் காலையிலும் மாலையிலும் 27-பிரதக்ஷணம் செய்யச்சொல்லி மாலைக்காலத்தில் அந்தமாரியம்மன் கோவிலுக்கு தினம் 1-இ27-விளக்கு வைப்பித்து, கடைசிநாளைக்கு அம்மனுக்கு அபிஷேகம் செய்வித்து காரீயத்தகட்டில்மஞ்சளுக்கோதிய மந்திரத்தை எழுதி27-பண்டாரங்களுக்கு அன்னமிட்டு தகட்டுக்குத் தூபதீப நைவேத்தியஞ் செய்து தாலிச்சரட்டில் கட்ட இந்தத் தோஷம் நீங்கும் எ-று. (32)

வையப்பாகோவதைக்கு அறுகம்புல்லு
மன்னவனேயுன் மனைவி தன்னைவிட்டு
செய்யப்பா அறுமுகவன் மூத்தோனுக்கு
தேங்காயுமைந்துடைத்துத் தீபங்கொண்டு
வையாநல்லெண்ணெய் விளக்குமைந்து
வஞ்சகந்தான்செய்யாமல் பாடிவிட்டேன்
நையவேயிப்படிநீ செய்வாயாகில்
நமதாணைமைந்தருண்டு நயந்துகூறே.

(இ-ள்) கோவதைசெய்த தோஷம்நீங்குவதற்கு ஆறுமுகக்கடவுளாகிய சுப்பிரமணிய சுவாமிக்கு மூத்தவராகிய விநாயகப்பெருமானுக்கு மாதத்தில் முதலில்வரும் சுக்கிரவாரம்தொட்டு அம்மாதக்கடையில்வரும் சுக்கிரவாரம் வரைக்கும் தினந்தோறும் அபிஷேகம் செய்து அறுகம்புல்சூட்டி நல்லெண்ணெய் விளக்கு ஐந்து வைத்து ஐந்து தேங்காயுடைத்து தூபதீபஞ் செய்துவருவதுந் தவிர ஐந்துபசுக்களுக்கு அறுகம்புல்லூட்டி உபசரித்து கோசலங்கொண்டு நித்தியம் ஸ்நானம்செய்து ஐந்து பிராமண பிரம்மசாரிகளுக்கு அமுதுபடைத்துக்கொண்டுவந்து கடைசிநாளில் விநாயகப் பெருமானுக்கு உயர்ந்த அபிஷேகஞ்செய்து திருவிழாக் கொண்டாடி 100-பசுக்களுக்கும் பூசைசெய்து ஐந்துபசுக்களை ஆலயங்களுக்குத் தானஞ்செய்து 100-பிராமணருக்கும் 100 ஏழைகளுக்கும் அன்னங்கொடு

த்து அந்தஜர்துபிரமசாரிகளுக்கு வேஷ்டி முதலியவைகளைத் தானங்கொடுத்து இப்படியாகிய புண்ணியஞ்செய்தால் அந்தப்பாவம் நீங்கி சுகமடைவார்கள். அவர்களுக்குப்புத்திர சம்பத்துண்டாகும். எ-று (33)

கூறுகின்றேன்வல்ல காட்டேரிதானும்
குடியிருந்துசெல்கின்ற குணத்தைக்கேளு
தாறுமாறாகவந்து வீட்டுக்குள்ளே
தந்தைமக்கள்பெண்டீரை சண்டைமூட்டும்
சீறுமாறேத்திவைக்கும் தீபந்தீயும்
க்ஷணத்திலே அருக்களிக்கும் சிலிர்ப்புதோன்றும்
வேறுவேறான மாமிசத் தைக்கொண்டு
வீட்டிலேபங்கிட்டு விருந்துசெய்யும்.

(இ-ள்) காட்டேரி ஏவுதலினால் வருங் குறியாவது என்னவென்றால் அந்த ஏவல்வீட்டுக்குள் பிரவேசித்து தந்தைக்கும் பிள்ளைக்கும், பிள்ளைக்கும், தாயாருக்கும், புருஷனுக்கும் பெண்சாதிக்கும் சண்டையை மூட்டுவிக்கும் எந்நேரமும் ஒருவர்க் கொருவரை சீறுமாறு செய்விக்கும் வைத்தவிளக்கில் கரும்புகை அதிகமாகதோன்றும், அவர் அவர் உடம்பை விஷ்காரணமாக அருக்கசசெய்யும், சிலுசிலுப்புண்டாகும், பன்றி ஆடு கழுதை குதிரை மாடு கோழி இந்த ஜீவன்களின் மாம்சத்தை அவரவர்கள் இலையிற் கொண்டுவந்து போடும்-எ-று. (34)

இன்னமுமேயில்லாத கனவுகாட்டும்
எப்பொழுதும்பல்லிசொல்லும் ஏக்கமுண்டாம்
பண்ணுமொழியார்களுக்குப் பெரும்பாடுண்டாம்
பலன்கொடுக்குங்கெர்ப்பமதைக் கெடுத்துப்போடும்
அன்னமதுமிறங்காது வியாதிகாணும்
ஆரோக்கியம்வாந்திவிக்கல் அழலுண்டாகும்
உன்னிதமாய்க்குருதி மிஞ்சிஉயிரைப்போக்கும்
உத்தமனேயிதைவிலக்க வகையுங்கேளே

(இ-ள்) இதுவன்றியும், பொல்லாத சொர்ப்பனம் உண்டாகும். சதா பல்லிபேசிக்கொண்டிருக்கும், துக்கமேமிகுதியாயிருக்கும், ஸ்திரீகளுக்குப் பெரும்பாடுண்டாகும், பலன்தருங் கருவழியும், சாப்பாடு செல்லாது, எப்போதும் வியாதி சம்பவித்துக்கொண்டே யிருக்கும், வாய் ஆரோக்கியமாயிருக்கும், வாந்தியும் விக்கலும் உஷ்ணமும் உண்டாகும், வாயிலிருந்து இரத்தம் பெருக்கிஉயிரைப்போக்கும். இப்படியாக பொல்லாங்கை நிவர்த்திக்கவகை கூறுகிறோம் கேள்-எ-று (35)

உபாயமென்னகாட்டேரி யுருவைச்செய்து
ஓலைகொப்பு அட்டிகையோ டுயர்மூக்குத்தி

மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



அபாயமிலாவளைகாப்பு கறுப்புச்சேலை
அணிந்துகையால்கண்திரந்து அஷ்டதிக்கும்
நமாயசிவவுடன் ஹ்ரீங்ஹ்ரீங்கென்றுகீறி
நாலுதிக்கும் இருளனையேநாட்டிவைத்து
உபாயமுடனேயுடற்கட் டுறுதியுள்ள
உத்தமனே திசைக்கட்டு முகந்துகட்டே.

(இ-ள்) உபாயமாகவே சொல்வேன் காட்டேரிபோல் உருவுசெய்து அவ்வுருவுக்குக் கம்மல் கொப்பு அட்டிக்கை மூக்குத்தி வளையல் காப்பு அணிந்து கறுப்புச்சீலைசுற்றி கையினால் கண்திரந்து அஷ்டதிக்கிலும் நமசியவ ஹ்ரீங்ஹ்ரீங் என்று எழுதி நாலுதிசையிலும் இருளனென்னும் தேவதையைப் பூசைசெய்து உடற்கட்டும் திசைக்கட்டும்கட்டி எ-று. (36)

ஒடுதற்குச்சூலாடு பன்றிகோழி
ஓதனமுஞ்சாராயத்துடனே கள்ளு
பேடுமுட்டை எள்ளுவெல்லம் காயம்வைத்துப்
பிசகாமல்சடாக்ஷரத்தில் பீசம்கூட்டி
வீடுவிட்டுக்காடுவா வென்று நூறு
விரும்பியேசொல்லிவிட்டு வெளியிற்போந்து
நாடியேகழிப்புடனே மயானஞ்சென்று
நலவாட்டின் கருவெடுத்துரத்தஞ்சேரே.

(இ-ள், கிளையாயுள்ள ஆடு பன்றி கோழி இவைகளைக்காவுகொடுத்து சாராயம் கள்ளுபலவித பறவைகளின் முட்டை, எள்ளு, வெல்லம், காயம், இவைகளை நிவேதித்து. கு-மா-ரா-யந-ம என்னும் சடாக்ஷரத்திற்குப் பீஜமாகிய அக்ஷரத்தையுங்கூட்டி நூறுதரம் இம்மந்திரத்தோடு வீடுவிட்டுகாடுவாடி காட்டேரி என்று சொல்லி முன்வைத்திருக்கிற கழிப்புடனே மயானம்போய் ஆட்டின் கருவெடுத்து அதோடு அதனிரத்தமுங்கூட்டி. (37)

சேர்த்தெட்டுத்திசைகளிலும் பெலிகொடுத்துத்
திறமான ஆணிகளைத் திசையில்நாட்டி
நாற்றிசையு மிப்படியே செய்வாயாகில்
நாடாது காட்டேரி நடுக்கும்போச்சு
பார்த்துப்பல் நூலாய்ந்தோர் கையால்கேள்வி
பண்ணடா குடிகுலத்துத் தெய்வத்துக்கு
ஏத்திபூசைசெய்து பணிந்தாயாகி
லெந்நாளுஞ் செல்வமுண்டா மிடரும்போச்சே.

(இ-ள்) இவ்விதம் இரத்தம்சேர்ந்த ஆட்டுக்கருவை நாற்றிசையிலும் பலிகொடுத்து முற்கூறிய காட்டேரிப்பாவைக்கு அஷ்டதிசையிலும்இரும்

பாணிகளை அடித்து 1008-தரம் மசிவயந என்று உருவுகொடுத்து அந்தப் பாவையை 8-அடி ஆழமானபள்ளம்வெட்டி அதில்வைத்து ஆபரணங் கழற் றிக்கொண்டு புதைத்துவிட்டு நல்லதண்ணீரில் 52-தரம் முழுகி யெழுந்து வீட்டுக்குவந்து குலதேவதையைப் பிரார்த்தித்து பல சாஸ்திரங்களையுமா ராய்ந்தோர்கள் கையினால் யாகஞ்செய்து பூசைபண்ணி 13 பிராமணருக்கு தேவதாபோஜனம் செய்வித்தால் உனக்குவந்த தோஷங்களெல்லாம் நீங் கும், செல்வம் பெருகும், சகல துன்பமும் நிவர்த்தியாகும்என-று. (38)

சொல்லுவிக்குஞ்சின்னேவற் குணத்தைக்கேளு
சுரத்தோடுகுளிர்காணும் துன்பநோயாம்
கல்லுவிழுமிரவில் நடைசத்தங்கேட்கும்
காவல்தாலையாரியைப்போல் கனவுகாணும்
சல்லியமாம்வீட்டிலுள்ள ஜனங்களெல்லாம்
தலைவிரித்து ஆடுவார்கள் குறிகள்சொல்வார்
சொல்லுமேகுழந்தைகளு மிசிவுகண்டு
சேயிழைக்குப்பால்வற்றிக் கொடுமைகாட்டும்.

(இ-ள்) தட்டாமற்சொல்லும் சின்னு என்னும் துஷ்டகிரகத்தின் ஏவ ற்குணத்தைக்கேளு சுரமுங் குளிருமுண்டாகும், இஃதன்றிபலவித கொடி யவியாதி காணும், வீட்டில் கற்கள்விழும். இராக்காலத்தில்யாரோ நடக்கிற தைப்போற் சத்தமுண்டாக்கிக் கேட்கும். ஸ்வப்பனத்தில் ஊர்காக்கும் தலையாரியானவன் தன்னைவந்து இழுப்பதுபோல் தோன்றும் வரும்படி குன்றிகடன்மேலிடும், வீட்டிலிருக்கின்ற ஜனங்களெல்லாம் ஒவ்வொரு வரும் தலைவிரித்து ஆடிக்குறிகள் சொல்வார்கள்குழந்தைகள் இசிவுகண்டு இறக்கும், ஸ்திரீக்குப்பால்வற்றித் துன்பமுண்டாகும் என-று. (39)

இயம்புகிறேன்வீரனது ரூபஞ்செய்து
இயன்றமோதிரமரைஞாண் கடுக்கன்மற்றும்
நயம்படவேபாகவஸ்திர முருமால்சுங்கு
நாகரீகமாயணிந்து நடுவேவைத்துப்
பயன்பெறவேநானுதிக்கும் அனுமாரெந்த்ரம்
பக்கத்தில்வயிரவனை யொக்கநாட்டி
சுயம்பொழுவேதிக்குடனுங் கட்டிக்கொண்டு
சுக்கிராயருந்திராய் சுகிர்தாவென்னே

(இ-ள்) இந்தத்தோஷம் நீரும்வகை யெப்படியெனில் அமாவாசைய தினம் இரவு 15 நாழிகைக்கு மசானத்திற்குசசென்று 108 சில்லியுடைய மண்பாத்திரத்தில் இலுப்பை யிலையைக் கொத்தோடு சொருகி மாடுமேய் ந்து அடிக்கட்டையாகியவிழலை மேலே சாத்தி சாம்பலின் மேலேவைத்து ஓடிவாடாவீரா சங்றங்பில் விற்விற்விற் ஹற் என்று 108-தரம் செபித்து அந்தக்கலசத்தைத் தலைகீழாய் சிரசின்மேற் கவிழ்த்துத்தாங்கிவந்து வீட்

டுப்பிழைக்கடையில் ஓர் பாவைசெய்து நாலு கண்ணும் இரண்டுமூக்கும் மூன்றுவாயும் ஒன்பது கையும் ஒருசிரமும் ஒருகாலும் மூன்று அடி கோசமுமாக அந்தப்பாவைக்கு உருவுகள்செய்து கடுக்கன் மோதிரம் அரைஞாண் முதலிய அணிகளை அணிந்து பாகை வஸ்திரம் உருமால்குட்டை சங்குகட்டி இவைகளை அழகுறவணிந்து அதன் தொப்புளின்மேல்கொண்டுவந்த கலசத்தைவைத்து நாலுதிக்கிலும் அநுமாரெந்திரமிட்டு பக்கத்தில் காளபைரவர் எந்திரமு மிட்டுக்கொண்டு திசைக்கட்டும் உடற்கட்டும் கட்டிக்கொண்டு சுக்ராய ருத்ராயா சுகிர்தாவென்று சொல்லி. (40)

சுகிர்தாயா வா வா வா வென்றுசொல்லித்
தொண்ணூற்றுருவு நீசெபிக்கவேண்டும்
அகமகிழஏழுதிக்குங் கட்டிக்கொண்டு
அப்பனேஒருதிக்கைப் பாழாய்ப்போட்டு
ஜெகம் புகழஇறச்சிபல காரமன்னம்
திறமாகவைத்திடவே சின்னு உண்ணும்
நகமகிழவராகத்தை வெட்டிரத்தம்
நலமாகக்கண்முன்னே காட்டிடாயே

(இ-ள்) சுகுர்தாயா வாவாவென்று சொல்லித் தொண்ணூற்றுறு உருவுசெபித்து ஏழுதிக்கு திக்குபந்தனம்செய்து ஒருதிக்கை பந்தனஞ் செய்யாது விடுத்து மாமிசம் பலகாரம் சாதம் இவைகளைவைத்துப் படைத்து பன்றியைவெட்டி அதன்இரத்தத்தை அந்தத் தேவதையின் கண்முன் பாகக்காட்டி எ-று. (41)

காட்டிடவே துருக்கன்விடுஞ் சின்னுத்தெய்வங்
கலங்கிநடுநடுங்கிக் காலில் வீழ்ந்து
பாட்டுவிட்டுஅபயமையா வென்றுசொல்லிப்
பாழ்மூலைவழியாகப் பறந்துபோகும்
வீட்டுக்குள்சடாக்ஷரத்தை யெழுதிவைத்து
வேதியரைத்தானழைத்து வேள்விசெய்ய
நாட்டிலுள்ள பேர்களுக்கு வினைகள்போகும்
நலமாகவிப்படிநீ செய்திடாயே.

(இ-ள்) இவ்விதமாகிய பரிகாரஞ்செய்யின் துலுக்கர்களால் விடப்படுந் தெய்வமாகிய சினனுவென்பது மனங்கலங்கிநடுநடுங்கி உன்காலில் வீழ்ந்து அதனுடைய ஆடல்பரங்களாகிய ஆடல்பாடல்களைவிட்டு அபயம் அபயம் என்று பாழ்மூலைவழியாகப் பறந்துசெல்லும். வீட்டிற்குள் சடாக்ஷரயந்திரம் எழுதி அதில் சடாக்ஷரங்களைப் பீஜத்துடனமைத்துப் பிராமணர்களை அழைத்து நவக்கிரக ஹோமஞ்செய்வித்தால் வீட்டிலுள்ளவர்கட்கும் மின்னும் அவரைச்சேர்ந்த அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கும்சகலதோஷ நிவர்த்தியாகும்பிறகு கலசத்தில் பாவையை வாரிப்போட்டு மயானத்தில்

புதைத்து விட்டு, நதிஸ்நானஞ்செய்து வீட்டுக்குவந்து மறுதினம் 15-பிராமணளுக்கு அன்னம் கொடுக்கவும் எ-று. (42)

செய்யடாசின்னெல்லாம் பறந்துபோகும்
செகந்தனிலே துலுக்கப்பேய் தெறிகெட்டுப்போம்
கைமுறைகள்பிசகாமல் செய்யவேணும்
கருவறிந்தகுருமாரை அடுக்கவேணும்
வையகத்தில்மாந்திரீகஞ் செய்வோமென்பார்
வடுகனிடயந்திரத்தின் வகையைக்காணார்
கையெழுத்துஞ்சதுஷ்கோணத் துள்ளிருக்குங்
கருத்தறியாற் குருத்துரோகி கிடாமாடேன்னே.

(இ-ள்) இதனால் சின்னுதேவதை பற்றறுந்துபோகும். பிறகு துலுக்கதேவதை எட்டியேபாராது. ஆனால் யிதற்குக் கைமுறைகள் பிசக்கக்கூடாது யிதற்குக் கருமூலமறிந்த குருவுகளை அடுக்கவேண்டும். சிலகுருத்துரோகிகள் தாங்கள் மாந்திரீகத்தில் கெட்டிக்காரனென்பார்கள், வைரவதெய்வத்தினுடைய மந்திரத்தின் விபரத்தைக்காணார்கள் கையிலெழுதுஞ் சதுஷ்கோணத்திலிருக்குமகிமையை அறியார்கள். யிவைகளைக்கடாமாடென்று சொல்வார்கள் எ-று. (43)

கிடாவென்றால்உழுவார்கள் பலன்காண்பார்கள்
கெட்டமாந்திரீ கராற்பல மொன்றில்லை
அடாவாடாவென்னைப்போ லில்லையென்பார்
அஷ்டகர்மவித்தையெல்லா மறிவேனென்பார்
படாசியடாகையடக்கம் அர்த்தலாபம்
பண்ணுவார்வெகுபேர்கள் மயங்கிப்போவார்
அடாமூடாவென் றுசொல்லித் தொழிலைசெய்வா
ரக்கிரமகருமங்க ளகன்றிடாதே.

(இ-ள்) கிடாமாடென்றாலும் உழுபவர்கள் உழுது பலன்காண்பார்கள் மந்திரத்தின் சொரூபந்தெரியாது மந்திரத்தில் வல்லமையுடையோமென்று சொல்கின்ற மடையர்களால் யாதொருபலனுமுண்டாகாதுபாமரஜனங்களை நோக்கி அடாவடா என்னைப்போல் மந்திரஞ்செய்பவர்களொருவருமில்லை அஷ்டகர்மவித்தைகளும் யாம்செய்வோம் யிந்த யிந்தப்பட்டணத்தில் யின்னின்னாருடைய சமுசாரத்தையும் பெண்ணையும் பிடித்திருந்த பிரமராக்ஷசையும் துரத்தினேம் அதற்காக அவர்கள் செய்துபோட்டதோட்டா யிதுவேயென்று காட்டுவார்கள் யாராவது எனக்கு மிஞ்சினவர்களுண்டாவென்று மீசையை முறுக்குவார்கள். எனக்கு மகாராஜாவையும் கையடக்கமாகச்செய்துகொள்வேன் என்று சொல்லி யாவத்ராளையும் தன் கையடக்கமாகச் செய்துவெள்ளும்பொருட்டு எல்லாருக்கும் பொருள்

களைக் கொடுப்பார்கள். யிதனால் வெகு ஜனங்கள் மயங்கி அவர்கள் வலையி லகீப்பட்டுக்கொள்வார்கள். பிறகு அவர்களை மந்திரவாதிகளென்று சொன் னவர்களை அடாவென்றும் மூடாவென்றும் வாயில்வந்தபடி பேசுவார்கள். யிவர்கள் ஜவாப்புசொல்வதற்கும் பயப்படுவார்கள். யாதொரு தோஷமு மில்லாதபேர்களைநோக்கி உங்களுக்கு கிரகதோஷம் மாடன தோஷம் பிருசிதோஷ முதலியபாபகருமங்களிருக்கின்றன என்று பயப்படசெய்து அவர்களிடமிருந்து பொருளைப்பறித்து தின்பார்கள், யிப்பேர்ப்பட்டவர் களால் யில்லாத தோஷம சம்பவிக்குமேயன்றி உண்டான தோஷம் போகுமோ எ-று. (44)

கருத்தறியுமூரினுள்ளோர் குணத்தைக்கேளு
காசியில தொழி லறிவோ மென்றுசொல்லார்
திருத்தமுள்ளபெருமைதனக் காசைவையார்
சிறப்பான விருதுகளைப் பூணமாட்டார்
விருதுகட்டுமந்திரத்தை விருப்பஞ் செய்யார்
வெகுபேர்களடித்தாலும் சிரிப்பாரன்றி
வெறுத்துரையார் கோபமவரி னண்டமெல்லாம்
விழுந்து கெடுங் காசினியும் வெந்து போமே.

(இ-ள்) உள்ளபடி மந்திரத்தினுட் கருத்தையறிந்த புண்ணியர்களின் குணத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. அவர்கள் தமக்கு யின்னின்ன மந்திரத்தொழிலைச்செய்யத்தெரியுமென்று படாடோபமாகிய சொற்களைச் சொல்லார்கள். பெருமைக் காசைப்படமாட்டார்கள். விருதுகளை அணிய மாட்டார்கள். தாங்கள் மந்திரவித்தையில் வல்லவர்கள் என்று வெளிப்ப டார்கள். எத்தனைபேர்கள் தங்களை அடித்தாலும் சிரித்துக்கொண்டிருப் பார்களன்றி யாதொன்றும்கோபித்து மொழியார்கள். யிப்படியாக இருக் குஞ்சாதுக்களுக்குக் கோபம் வந்துவிட்டாலோ அண்டாண்டங்களெல் லாம் யிடிந்து விழுந்துவிடும். உலகமெங்கும் வெந்து நீறாகும்-எ-று.

இடிந்தகங்களமரரெலாம் கலங்கிப்போவார்
ஈஸ்வரனும் பயப்படுவான் கடலும்வற்றும்
இடிந்துவிழுஞ்சூரிய மண்டலமும்நக்ஷத்
திரஞ்சந்தரனின்னு முளகோள்கள்விழும்
கடிந்துபுவிவெடித்துவிடுஞ் சேஷன்வாயால்
கக்கிநஞ்சைசொக்கியவன் செத்துப்போவான்
மூடிந்தபின்பு ஆமென்றுவெல்லாம்போகு
மும்மூர்த்திக்கதிகமடா முறைகண்டோரே.

(இ-ள்) தேவர்களெல்லாம் மனமிடிந்துவருந்துவார்கள். பரமேஸ்வர னும் பயப்படுவான், சமுத்திரமும் வற்றிவிடும் சூரியனாதி கிரகமண்டலங் களும் நக்ஷத்திரமண்டலமும் யிடிந்துவிழும் பூலோகம் வெடித்துப்போகும்

ஆதிசேஷனென்னும் பாம்பு விஷத்தைக்கக்கி யிறந்துபோவான். அவாள் வாக்கினால் முடிந்தபின்பு ஆகட்டுமென்று ஏதாவது ஒருசொல் சொல்லி விட்டால் எல்லாம்போய்விடும், அவர்கள் திரிமூர்த்திகளுக்கும் மேலென்று நாம் அவர்களின் முறைமையைக்கண்டிருக்கிறோம் எ-று. (46)

முறையுடனே மயான ருத்திரிக்குணத்தை
மொழிகின்றோ முன்னந்தம பிசகாதேகேள்
தரைதடவியழுஞ்சிரிக்கும் வஸ்த்ரம்போக்கும்
தானினைந்ததிசைதனிலே ஓடிப்போகும்
குறைவுடனேயிரவதனிற் றூங்கிடாது
கொள்ளையிடவருவதுபோல் குடியில்போகும்
நிறையானவிப்பித்தந் தீரவென்றால்
நிலையாகச்சொல்லுகிறே னிலைத்துக்கேளே..

(இ-ள்) இனிமையான ருத்திரி யேவலின் குணத்தை முறைமையாகச் சொல்கிறேன் கேட்பாயாக. முன்னும் பின்னும் பிசகாதுகேள் பூமியைத் தடவி தடவி அழும், சிரிக்கும், வஸ்திரத்தை அவிழ்த்தெரியும், நினைக்கிற திசையெல்லாம் ஓடிப்போகும், யிராத்திரியில் தூங்காது, பலபேர் வீடுகளி லும் கொள்ளையிடவருவதுபோல் உள்ளே பிரவேசிக்கும் இந்தப் பயித்தி யந்தீரவென்றால் அதற்குப் பரிகாரஞ் சொல்லுகின்றோம் புத்தியைச் சிதற விடாது கேட்பாயாக எ-று. (47)

நிலைத்துக்கேள் யிருளனுருவஞ்செய்து
நிறையான ஆண்பெண்போல் பாவைசெய்து
குலைத்தகொண்டையுடனதற்குக்குசும்பாவஸ்த்ரம்
கோணீலதுப்பட்டிகூறுங்கச்சை
இலக்கமுற்றபணிகடுக்கன் மோதிரம்பொன்
னிரசிதத்தாற்காப்பிட்டு மலர்கள்சூட்டி
வலுத்ததாமாடுபன்றி கோழிசோறு
வகையாககழிப்பிட்டுப் பின்னுங்கேளே.

(இ-ள்) நான்சொல்வதைக் கவனமாககேள், இருளனுடைய உருவஞ் செய்து ஆண்பாவையும் பெண்பாவையுஞ்செய்து பக்கத்தில் வைத்து அந்த இருளனுருவத்துக்குக் கொண்டைவைத்து அக்கொண்டைக்குக்குசும்பா வஸ்திரமணிந்து நீலநிரத்தினுடைய துப்பட்டி சாத்தி மிகவும் பிரகாசிக் கின்ற பொன்னாற் செய்த கச்சை கடுக்கன் மோதிரம் வெள்ளிக்காப்பு முத லிய ஆபரணங்களணிந்து பூச்சூட்டி ஆடுபன்றி கோழி இவைகளோடு சாதத்தையும் வைத்துக்கழிப்பெடுக்கவேண்டும் அல்லாமலும் இன்னுஞ் சொல்லுகிறேன் கேள் எ-று. (48)

இன்னமுமேயெனுமிச்சம்பழந்தானூறி
சிலங்கியிடுஞ்சிவம் கிறிங்வங்கென்றும்மே
தன்னையேயெழுதியுரு லக்ஷமீந்து
சாந்தமூன்றக்ஷரமூந் தகட்டில்கீறிச்
சென்னியிலேபழந்தேய்த்துச் சலத்தையூற்றித்
தினமாகவைந்துநாள் செய்தபின்பு
சென்னியிலேயத்தகட்டைக் கட்டிற்பின்பு
செயிழைக்குநல்லறிவு மிகவுண்டாமே.

(இ-ள்) அதாவது எலுமிச்சம்பழம் சாறெடுத்து ஒவ்வொரு பழத்திலும், சிவம் கிறீம் வங் என்று யெழுதி கும்பலாய் ஒருதட்டில் வைத்துக்கொண்டு அதன்மேல் கையைவைத்து மூன்னெழுதிய மந்திரத்தைலக்ஷம் உருவுகொடுத்து, அம்மாரின் தலையில் இந்தஎலுச்சம்பழத்தைத் தேய்த்து, 100குடம் ஜலம்கொட்டி தினம்இப்படியே 5 நாள் செய்து பிறகுஇந்தமூன்று அக்ஷரத்தையே பஞ்சலோகம்சேர்த்து செய்ததகட்டில் எழுதி இலக்ஷம் உருவுகொடுத்து தூபதீப ஆராதனைசெய்து ஆதிவாரத்திலித்தகட்டைக் கட்டினால்அம்மாரது க்குச் சகல பயித்தியமும்தீர்ந்து நல்ல அறிவுண்டாகும் எ-று. (49)

நல்லறிவுண்டாகுமடா குருவைக்கண்டு
நகாரமுதலைந்தெழுத்தை நாடிப்பாரு
வல்லியென்றமூன்றெழுத்தை யறிந்தாயானால்
மனோன்மணித்தாயும் முனக்குவகைதான்சொல்வாள்
அல்லலிலாச்சடாக்ஷரத்தை யறிந்தாயானால்
ஆறுமுகன் வந்துனக்கே யெல்லாஞ்சொல்வான்
கல்வியினால்மந்திரங்கள் செய்வாயானால்
கடைகெடுவாய் குலவீனந்தங்குந்தாமே

(இ-ள்.) நல்ல அறிவுண்டாவதற்கு வகையைச் சொல்லுகிறேன் கேள். நல்ல அறிவுடைய ஆசாரியனைத்தேடி நகாரமுதலாகிய ஐந்தெழுத்தென்னும் பஞ்சாக்ஷரத்தை ஆராச்சிசெய். தேவி, அக்ஷரமாகிய ஐயும்கிலியும்சவ்வும் என்னும் திரியாக்ஷரத்தை அறிந்தால்மனோன்மணியென்னும் பராசத்தியானவள் உனக்கு எல்லாவகையையும் சொல்லுவார்கள், துன்பங்களை ஓட்டும்சடாக்ஷரத்தையரிந்தால் சிவசுப்ரமணியக்கடவுள் உனக்கு நேராகத்தோன்றி திரிகாலக்கியானத்தையுந் தெரிவிப்பார். இம்மந்திரங்களைக் குருமுகமாயறிந்து செய்தாயானால் மாத்திரம் எல்லாம் உனக்குக் கைகூடுமன்றி கல்வியளவாகச் செய்தாயானால் கடைகெட்டுப்போவாய் குலத்தாழ்வும் நேரிடும் எ-று. (50)

தங்காதேபோவதென்று வென்றுகேளு
தனித்தனியே தேவதைமேலாணைசெய்து

பங்கவயிறதுவளர்க்கப் பொய்கள்கூறிப்
பாவைசெய்து கோழிபன்றி யாடுவெட்டிப்
பொங்கலிட்டுச்சாராயங்கள் ளுண்டாக்காற்
பெரியோர்கள் சாபமெங்கே போகுஞ்சொல்வாய்
பொங்கமிடுங் குலந்தன்னைத் தொடருஞ்சொன்னேன்
பூதங்களுளநாளு நரகந்தானே

(இ-ள்) அது என் குலத்துக்குப் பெருமையிலாது தாழ்வடையுமென்றால் காரணஞ்சொல்லுகிறேன் கேள் நீ வயிறு வளர்க்கும்பொருட்டுச் சகல தேவதைகளின்மீது மனையிட்டுப் பொய்வார்த்தைப்புகன்று பாவை செய்துவைத்து ஆடு பன்றி கோழி இவைமுதலிய ஜீவவதைசெய்து பொங்கலிட்டு வைத்த சாராயங் கள்ளு வைக்கவேண்டுமென்று சொல்லி வாங்கி வந்ததை அப்பாவையி னெதிரில் வைத்து உடனே அதையெடுத்து வாயில் வார்த்துக்கொண்டு இப்பேர்பட்ட தீமைகளைச் செய்தால் பெரியோர்கள் சாபங்கொடார்களா அச்சாபம் விருதாவாய்ப் போய்விடுமா அதுகுலத்தைத் தொடரும், பிரதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்சபூதமுள்ள நாள்வரைக்கும் நரகத்துன்பமும் மனுபவிக்கும்படி நேரிடும் எ-று. (51)

நரகந்தான்வாராது தாயைக்கண்டு
நாற்பத்துமுக்கோணந் தன்னில்நின்று
பரனென்றசிதம்பரத்தையறிந்தாயானால்
பாழாகுஞ்சீப்பட்டபஞ்சுபோல
உருவானவைம்பத்தோரக்ஷரத்தா
லுத்தமனேகொலையெல்லாம் பனிபோல்மீளும்
கருவானவெட்டெழுந்து மிரவியாச்சி
கண்டறிந்தபேர்கள் சிவநடியார்தாமே

(இ-ள்) தேவி பீஜாக்ஷரத்தைக்கண்டு நாற்பத்துமுக்கோணச் சக்கரத்தில் நின்று சிதம்பரசக்ரத்தை அறிந்தால் நரகங்களெல்லாம் சீப்பட்ட பஞ்சுபோல் பாழாகி உன்னைத் தொடராது ஐம்பத்தோரக்ஷரத்தினால் கொலைகளெல்லாம் பனிபோலத் தீரும் அப்பொழுது நீ உத்தமனாவாய் ஓம் ஆம் ஔம் நமசிவய என்னும் அஷ்டாக்ஷரமே சூரியனாகும் இவ்வுண்மையைக் கண்டறிந்தவர்களே சிவனடியார்களாவார்கள் எ-று. (52)

நாடிப்பார் குழியிருசி துறையிருசி
நலமானவனத்திரிசி செய்யுங்கூறு
கூடுமிந்தமூன்றினது குணத்தைகேளு
குழியிருசிவளர்த்தியடா கொங்கையில்லை
மாடிப்பார் துறையிருசி வடிவமுண்டு
மாதவிடாயில்லையடா வனத்தாள்சேதி

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்


தேடிப்பார் வண்ணாரத் துறையிலேதான்
செங்கரும்பால் மாவிலையாற் பந்தற்போடே.

(இ-ள்) இருசி பேதங்களைச சொல்லுகிறேன்கேள். அவை துறையிருசிகுழியிருசி வனத்திருசி என்பனவாம் அதன்பேதகுணங்கள் எவ்வகையதெனில் குழியிருசி மிகவும் நீண்டவடிவமுடையது. ஆனல் அதற்கு இருகொங்கையுமில்லை. துறையிருசி அவயவப்பழுது ஒன்றுமில்லைமாதவிடாய் இடையாது. வனத்திருசி எப்படிப்பட்டதெனில், அதற்கும் அவயவப்பழுது இல்லை அதுவசிக்குமிடம் வண்ணார்கள் துணிதோய்க்கும் நீர்த்துறை இவைகளைவசம்செய்யவேண்டில், இவைகளுக்கு செங்கரும்பாலும் மாவிலையாலும்பந்தல்போட்டு (50)

பந்தலிட்டு செங்கல்லு மூன்றுநாட்டு
பரிமளமாம்மஞ்சளிட்டு சலத்தையூற்றி
சந்தனமுஞ்சவ்வாது புனுகுமிட்டு
தனியாகமூன்றடுப்புப் பொங்கலிட்டு
சந்தடிக ளொடுபள்ளையத்தைப்போட்டு
சர்க்கரையும் முக்கனியும் நெய்யும்வைத்து
அந்தமுள்ளகோவிலுக்கு வடக்குவாசல்
அறிவையரே தெற்குமுகம் வைத்திடாயே.

(இ-ள்) முற்கூறியபடி பந்தலிட்டு மூன்றுசெங்கல்நாட்டி மஞ்சள்பூசி ஜலத்தினல் அபிஷேகம் செய்துமஞ்சள்குங்குமம்பூ இவைகளை அணிந்து சந்தனம் சவ்வாது புனுகு இவைகளை அணிந்து, தனித்தனியாக மூன்று பானைவைத்துப் பொங்கலிட்டுமேளதாளவாத்திய கோஷ்டத்தோடுபள்ளையம்போட்டு சர்க்கரை பால் வாழைமாபலா என்னு முப்பழங்களோடுநெய்யும் படைத்துப் பிரார்த்தித்தல்வேண்டும். இந்த இருசிகும்பிடுவது எங்கே கும்பிடவேண்டுமென்றால் ஊரிலுள்ள தேவாலயங்களுக்குத் தென் திசையில்வைத்துக்கும் பிடவேண்டும் எ-று. (51)

வைத்தேழுமஞ்சளிலே பீசம் கூட்டி
வராகிவாவடுகாவா வம்வம்மென்று
சித்தான காரியத் தகட்டுக்குள்ளே
ஜெயமான தனுமார யந்த்ரம்நாட்டி
உத்தமனே உருவுலக்ஷமானபின்பு
உண்மையாம் நூறுகுடஞ் சலத்தையூற்றி
கர்த்தாவைநினைந்து மஞ்சள் மந்திரித்தால்
கன்னியர்க்குப்பீடையது கரையுந்தானே.

DR. U.V.S. IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA
BESANT NAGAR, MADRAS-90

(இ-ள்) இப்படியாகப் பூசைபோட்டு பீசாக்ஷரமாகிய ஐயும், கிலியும் சவ்வும் என்று ஓதிய எழு மஞ்சளைப் பெண்டுகளுக்குக் கொடுத்து காரியத்

தகட்டில் தருமார சக்கரம்போட்டு இந்தபீஜாக்ஷரங்களையெழுதி இதற்கு தூபதீபந்தந்து இந்த அக்ஷரத்தோடு வராகிவா-வடுகாவா-வம்வம் என்று இலக்ஷம் உருவுதந்து-அந்தப்பெண்டுகளுக்கு 100-குடம்ஜலம்ஊற்றி பரம சிவனைப்போற்றி செய்து முற்கூறியபடி மறுபடியும் மஞ்சள் மந்திரித்துக் கொடுத்துஇந்ததகட்டையும தாயித்தியில்சேர்த்துக்கட்டிக்கொள்ளச்செய் அப்படி செய்தாயானல் பெண்களைப்பிடித்த இருசியின் துக்கம்தொலைந்து வாழ்வார்கள் எ-று. (52

கரையில்லாயேவலுக்கு மிதுவேமந்த்ரம்
கண்டகண்ட மந்திரத்தைக் கருதவேண்டாம்
பரையான உமையவளா மெனைப்பணிந்து
பார்தனிலே யித்தொழிலையாடிப்பாரு
வரையெட்டுள்ளிருப்போ ருனக்குமீடோ
மாந்த்ரீக ருனக்கீடோ மகிழ்வாரப்பா
உரையானவன்புடனே முறைதப்பாமல்
உலகத்தோர் துயர் நீக்கி யுகந்துவாழே.

(இ-ள்) எந்த ஏவலாயிருந்தாலும் இதுவே உண்மையான மந்திரம். இதுதவிர கண்டமந்திரங்களை யெல்லாம் கருதவேண்டியதில்லை உமைய வளாகிய என்னைத்தியானித்து இவ்வுலகில் நான் சொல்லியமுறைபடி. இந்தமந்திரங்களை உபயோகப்படுத்து அஷ்டமலைகளிலுள்ள சித்தர்களும் உனக்கு ஈடாக மாட்டார்கள். எந்த மாந்த்ரீக ரெல்லாரும் ஈடாக மாட் டார்கள். மிகவும்பக்ஷத்துடனே சொன்னமுறைதப்பாது இதை அநுஷ்டி த்து உலகத்தாருடைய துன்பங்களைப்போக்கி எந்நாளும்சுகசீவியாய்வாழ் ந்து கொண்டிருப்பாய். (53)

திருச்சிற்றம்பலம்.

# மாந்திரிக தீபம்.

முதற்பாகம்-முற்றிற்று

உ

கடவுள் துணை.

# சகலதோஷக் குறிகள்.

---

## குளி தோஷம்.

இப்பூவுலகின் கண் கணவனோடு கூடிய எவ்வருணத்து மாதர்களாயிருந்தபோதிலும் அவ்வம்மாதத்தில் உண்டாகும்பூப்பாசௌச பரிக்கிரகார்த்தம்ஸ்நானஞ்செய்தவுடன் யாதாமொருவர் திருஷ்டியிற்படாது பர்த்தாவின் திருஷ்டியிற்படவேண்டும் தற்காலயபுருஷனைக்காணார்களாயின் சூரியனைப் பார்த்துத் தரிசனஞ் செய்யவேண்டியதென்பது சாஸ்திரபூர்வகம்.

இஃதறியாத மாதர்கள் மாதாந்தரஸ்நானஞ் செய்து வரும்போது எதிர்படும் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முகத்தில் விழித்து அன்றிரவில்புருஷசையோகத்தில் கர்ப்பமாயினால், பகலில் இவர்கள் பார்வைதாக்கிய குழந்தைகளுக்கு அன்றுமுதல் சாப்பாடுவிலக்கம். தேகமெலிவு-தலைசாய்தல்-மறதி-வாய்நீர்வற்றல்-வயிறுப்பல்-தலைமயிர்விழல் கண்சொருகல் கைகால்கள்சோர்தல் பலவீனம் பேதி அஜீரணமுதலிய பலவகை வியாதியுடன்தேகநாற்றமுண்டாகிதன்னைப்பார்த்தஸ்திரீயின் கருப்பம்வளர வளரவியாதி அதிகப்பட்டு வருந்தும். கற்பத்திலுள்ளசிசு வெளிப்பட்டபிறகு இக்குழந்தை பிழைத்தாலும் பிழைக்கும். அல்லது இறந்தாலும் இறக்கும். இதனைக் குளிதோஷமென்று கூறுவர்.

## பக்ஷிதோஷ வகை.

உச்சி நடுராத்திரி அந்தி சந்தி, இந்தசமயங்களில் தெரு, புறக்கடை, கடை மைதானமுதலிய இடங்களில்குழந்தைகளை எடுத்துப்போவதினால் ஆண்பக்ஷிதோஷம், பெண்பக்ஷிதோஷம், மலட்டுபக்ஷிதோஷம், அலிப்பக்ஷி தோஷம், என்னும் நான்குவிதப் பக்ஷிதோஷங்களுண்டாகும். அதாவது எந்தப்பட்சி சந்திப்போ அந்தப்பட்சிதோஷம் தாங்குமென்பதாம்.

## பட்சிதோஷங்களின் பொதுகுறி.

மேற்கூறியநான்குவிதப் பட்சிகளில் எந்தப்பட்சியெவ்வெசசமயங்களில் எந்தக் குழந்தைகளைச் சந்திக்கிறதோ அந்தக் குழந்தைகளுக்கு வாந்தி பேதிநடுக்கல் பால்குடியாமை தோள் உச்சந்தலை இடுப்பு இவ்விடங்களில் பள்ளம்விழுதல் கால் கைகள்சோர்தல் தாகம்தாபசுரம் பற்கடித்தல் பாதம் வீங்கல்பலக்குறைவு என்னும் இவைகள் உண்டாகும்.

## ஆண்பட்சி தோஷம்.

தாகம்பேதி கண்கள் குழிவிழல்தேக உஷ்ணம் குடித்தப்பால்வாந்தி அஜீரணம் சீறிஅழுதல் கண்சொருகல் வயிற்றுக்கடுப்பு என்னும் இவைகளுண்டாம்.

### பெண்பக்ஷி தோஷம்.

தேகமிளைத்தல நாவை நீட்டிக்காட்டுதல் ஆசனம்பிதுங்கல் கண்சொருகல் அலரி அழுதல் உச்சி பள்ளமாதல் சுரம் இளைப்பு மயக்கம் நாக்குவறளல் கண்கள் வெளுத்துக்காட்டல் என்னும் இவைகளுண்டாகும்.

### மலட்டுப்பட்சி தோஷம்.

தேகச்சூடு நாக்குவறளல் கண்ணில் பீளைசாறல் தேகங்கருத்தல் இளைப்பு உச்சியில் பள்ளம் விழுதல் தாகம் பேதி வாந்தி என்னும் இவைகளுண்டாகும்.

### அலிப்பட்சி தோஷம்.

வாந்தி பேதி இளைப்பு தாகம் கண்சொருகல் சிறுநீர் மஞ்சளாதல் தேகநாற்றம் வாய்நாற்றம் தேகச்சூடு என்னும் இவைகளுண்டாகும்.

சிலமந்திர சாஸ்திரங்களில் பட்சிதோஷங்கள் இன்னும் பலவகைப் படுமென்றும் கூறுகின்றன அவையாவை யெனில் கீழே சொல்லப்படுகின்றன.

### நித்திரைபபுள் தோஷம.

குழந்தைகளுக்கு ஓய்வின்றிய உறக்கம் மயக்கம் தேகவாட்டம் பெருமூச்சு உச்சிபள்ளம், பாலாடைமுகம், தலைநடுக்கம். கைகால்ஓச்சல் இவைகளை உண்டாக்கும்.

### வாபபுள் தோஷம.

கண்ணீர்வடிதல், நாவில் நீர்வற்றல், தேகவெளுப்பு, தேககாங்கை, கழுதை, பூனை, இவைகளைப்போல் சத்தமிடல், விக்கிவிக்கி அழுதல், போஜனம் வேண்டாமை இவைகளை யுண்டாக்கும்

### கானபபுள் தோஷம.

சீறிச்சீறி அழுதல், சரீரம் உலரல், பால்வாந்திசெய்தல், உடம்பெலா நோய் மலம் புளிப்புநாற்றம், கைகால் கண் எரிச்சல் என்னும் இவைகளை யுண்டாக்கும்.

### நீர்பபுள் தோஷம்.

முலைபிடித்துண்ணாமை, ஆசனக்கடுப்பு, கண்குத்தல் நீர்வடிதல், ஜலுப்புசரீரம் வெளுத்தல், பாலடைமுகம் என்னும் இவைகளுண்டாகும்.

## பக்ஷிதோஷம் முற்றும்.

---

### பூதகணச்சந்திபபுக்குணம்.

இப்பூதகணத்தின் பேதங்கள் முப்பத்துமூன்று அதன் குறிகுணங்கள் அளவற்றவைகள் இவற்றைவிரிக்கின் மிகவிரியுமாதலால் ஒருவாறு சுருக்கிக்கூறுவாம் இப்பூதகணங்கள் யாவரைப் பீடிக்குமெனில் சோரபுருஷர் சோரஸ்திரீகள் கெர்விகள் அசத்தியர்கள் முரடர்கள் பூர்வம் கோவதை சிசுவதை பிராமணவதை முதலியவைகளைச செய்தவர்களைப் பிடித்து பீடிக்கும்.

காம பூதம்

இந்தப்பூதம்பிடிக்கப்படுமாயின் அதன் குணங்களென்ன வெனில், மதத்தானடை சந்தோஷம் பலஸ்திரீ களின்மேலும் நாட்டம், ஜெபம், ஆசாரம், சந்தனமணியப் பிரீதி இக்குணங்களுடாம்.

ராக்ஷச பூதம்.

கண்டவர்களை அடித்தல், கோபம் பண்ணிக்கொள்ளல் மிதமிஞ்சிய போசனம், மாமிசப்பிரியம், அதயிரியம், அசங்கித உருவம், உதட்டைக்கடித்தல், சற்றுநேரம்பேசாதிருத்தல், கண்சிவப்பு, பெருங்கூச்சல், செவந்தபுஷ்பவிருப்பம், செஞ்சந்தனவிருப்பம், இரவில் பயப்படாது எங்கணும் திரிதல்இக்குணங்களுண்டாம்.

வேதாள பூதம்.

கபோலம்வற்றல், கத்தியால்வெட்டிக்கொள்ளல் சுகந்தாதிவஸ்துக்களைத்தரித்தல், அகாலநித்திரை, அதிகபோசனம், யாவரையும்யவமரியாதையாக அழைத்தல், வெறித்துபார்த்தல், சேஷ்டைபண்ணுதல்இக்குணங்களுண்டாம்

கிரண பூதம்.

துன்மார்க்கசகவாசம், பயங்கரவார்த்தை, பெருந்திண்டி, ரத்தக்கண், சமயம்பார்த்துப் பிறரை அடித்தல், தலைபாரம்களளுகுடித்தல், மயாணசஞ்சாரம், தலை சொரிதல் இக்குணங்களுண்டாம்.

கூஷ்மாண்ட பூதம்.

தாமதவார்த்தை, பீசமும் விரையுங் கனத்தல், அதிககோபம் பயங்கரவுருவம், தண்ணீரில்மூழ்கல், பூசைசெய்யப்பிரியம்பிராமணவிசுவாசம்கல்வியிற்பிரியம் இக்குணங்களுண்டாம்.

யக்ஷ பூதம்.

நகைத்தல், பிறருடைய வேஷ்டியைக் கிழித்தல், சந்தோஷம் யானை நடை, பரிகாசம், யாவரையும் தூர்பாஷையாகத்திட்டுதல், செல்வப்பிரியம் ஆடல்பாடல், அழுதல், தற்கொலைப்பிரியம், ஞானவார்த்தை, கண்களில் ஜலம்வடிதல், அற்பக்ஷேமம், கொடுக்குந்தன்மை, ஸ்நானம், போசனம், குந்திக்கொண்டுறங்கல், இக்குணங்களுண்டாம்.

பைசாச பூதம்.

பெருங்கூச்சலிடல், குரல்கம்மல் தனதுதுக்கத்தை ஒருவரோடு சொல்லுதல், தேவத்துவேஷம், யாவரையும் உதாசினமாகப் பேசுதல்; கல்லாலடித்தல் மரமேறப்பிரியம் ஜலத்திற்குதித்தல் தூக்கத்தகாத பாரந்தூக்கல் பெருந்திண்டி தேகத்தை நகத்தால் கீரிக்கொள்ளுதல் இக்குணங்களுண்டாம்.

சித்த பூதம்.

ஓடல் வீரம் ஞானம்பேசல் ஆகாயத்தில் பறத்தல்போல் தாவல் குளிகை செய்வேனெனல் மருந்துசெய்தல் முதலிய குணங்களுண்டாம்.

## முனி பூதம்.

செபம் செய்தல் தியானஞ்செய்தல் விபூதிபூசல் சாஸ்திரம் படித்தல் ஞானவார்த்தை வீட்டில் தங்காமை மரமேறி யிருத்தல் இக்குணங்களுணடாம்.

## தூரவ பூதம்.

பிறருக்கு ஞானசாஸ்திரம போதிக்கவருதல் மூன்று வேளையில் நீராடல் சேஷ்டை செயதல் இக்குணங்களுண்டாம,

## விருத்த பூதம்.

கோணியநடை தடிபிடித்துக்கொள்ளல் கோழைகட்டல் பிததசவனம் மயக்கம். சரிரந்திரைத்தல் இக்குணங்களுண்டாம்.

## காந்தர்வ பூதம்.

அற்பவார்த்தை தேகம் அழகிடல் தேகத்தில் சுகந்தபரிமளம் வீசுதல் அடிக்கடி நகைப்பு சுரக்கியானம் ஆசாரம் புஷ்பநேயம் கேளிவிலாசம் இக்குணங்களுண்டாம்.

## தேவ பூதம்.

வெகு நாள் முன்னடந்த வார்த்தையைப்பேசுதல் வெள்ளைவஸ்திரம் புஷ்பம இவைகளிற்பிரீதி ஆசாரம் சத்தியம் லோபகுணம் பிராமணர்களிடத்தும் தேவர்களிடத்தும் விசுவாசம் ஒருவேளை கண்களை மூடுதல் நதிஸ்நானம் இக்குணங்களுண்டாம்.

## அசுர பூதம்.

பிராமணத்வேஷம் சரீரத்தில் அதிவியர்வைகள்ளுகுடித்தல் மாமிசபிரியம தேவர்களிடத்திலும பிராமணர்களிடத்திலும் வெறுப்புமிக்க சௌரியம் பிரமாதி தேவர்களும் நான்தானெனல் சஞ்சலபுத்தி அபிமானம் விடுதல் இக்குணங்களுண்டாம்.

## அர்த்தபிநா பூதம்.

முகக்களை நீங்கல் அகாலநித்திரை சோம்பல் சுபாவவார்த்தை துக்கமுகம் உருட்டுப்பார்வை கருதியவஸ்துப்பிரீதி மாமிச விருப்பம் இக்குணங்களுண்டாம்.

## பிரமராக்ஷச பூதம்.

பெருந்திண்டி சாஸ்திரிகள் வேதம்வாசித்தார் மந்திரவாதிகள்பிராமணர்வைத்தியர் தேவர் இவர்களிடத்து விரோதம் தனக்குத்தானே அடித்துக்கொள்ளல் யாவரையும் அலட்சியமாகயழைத்தல் என்னும குணங்களுண்டாம.

## ஈசுர பூதம்.

கம்பீரமான பெருந்தொனி சதாசிவ சரித்திரபாராயணம் பிராமணப்பிரீதி வேதபடனம அதிகோபம் இவைகளுண்டாகும்.

### விருபாக்ஷ பூதம்

*பச்சைமாமிசம் மச்சம் களிவகை இவை—— அதிப்ரியம், உரோமச்சிலிர்ப்பு, தேகபுஷ்டி, சதா மேனோக்குப்பார்வை இவைகளுண்டாம்.*

### தபோ பூதம்.

*சம்பத்துப்பெருகுதல், ஈசுரபக்தி, யார் எப்பொருளைக்கேட்கினும் இல்லையென்னாது தருதல் இக்குணங்களுண்டாம்.*

### யாகசேன பூதம்.

*அத்வைதசித்தாந்த பாராயணம், வெகுமானங்கொடுத்தல், பெருமையாகத் தன்னைப் பிறர்பேச இஷ்டப்படல், சமஸ்கிருத அபேக்ஷை, பிரமநிலையைப்பற்றிப், பேசுவோரிடம்விசுவாசம், தற்புகழ்ச்சி இக்குணங்களுண்டாம்.*

### இந்திர பூதம்.

*நல்ல போகவிருப்பம், குறையாத ஐஸ்வரியம், இடிஇடித்தல்போல உரத்தவார்த்தை, ஸ்திரீகளால் பழிப்புவார்த்தை இக்குணங்களுண்டாம்.*

### வருண பூதம்.

*கள்ளு சாராயம் சுகந்தம் இவைகளிற்பிரீதி வில்வித்தையிற்பழகஇஷ்டம், அதிமூத்திரம், தண்ணீர்வாசம் இக்குணங்களுண்டாம்.*

### வித்தியுன்மாலி பூதம்.

*மேகசாலமுண்டாய் குமுறல் இடித்தல் மின்னுதல் மழைபொழிதல் இவைகளுண்டாகும்போது அதிபயங்கரப்படுங் குணமுண்டாகும்.*

### நிகட பூதம்.

*ரகசியத்தில் சங்கீதம்பாடல், மவுனம், சிரித்தல், ஆடல், எல்லாவற்றிலும்மோகம், ஸ்திரீவிருப்பம், இக்குணங்களுண்டாம்.*

### மணிவா பூதம்.

*மிகுந்த கடுமையானகோபம், ரோமஞ்சிலுப்பு, கண்சிவப்பு, புருவமேல்வெறித்து நோக்குதல், யாவரையும் அலட்சியப்படுத்தல், எதொன்றுக்கும் பயப்படாமை இக்குணங்களுண்டாகும்.*

### சுக பூதம்.

*அவயவ நடுக்கம் மிகுந்த ஓட்டம், பித்தமயக்கம், பயம் இக்குணங்களுண்டாம்.*

### சாகோர்த்த பூதம்.

*கொம்பு-கல்-மண்ணாங்கட்டி-ஓட்டைபானை-கந்தைத்துணி இவைகளைக்கையிலெடுத்துக்கொண்டு தெரு-ஆறு-மைதானம்-[illegible]னம்-இவ்விடங்களிற்சுற்றல் - நிர்வாணகோலம்-இலையை வஸ்திரமாகத் தரித்தல் பெருந்திண்டிகள் குடித்தல் இக்குணங்களுண்டாம்.*

### ஹிஸ்ததேர பூதம்.

வழியில்போகும்ஸ்திரிகளைக் கெடுத்தல், சாம்பல்மேட்டில்சயனித்தல் குப்பையைவாரி மேலே போட்டுக்கொள்ளல், பிரிமணையைத் தலையிற் சுமக்குதல் தனக்கு வேண்டிய வஸ்துக்களை மிதமீறிப் புசிக்குதல் இக்குணங்களுண்டாம்.

### நகபூதம்.

நலம் பொலம்எண்ணுது நடத்தல்-கள்குடித்தல்-சதா; பிறரோடு சண்டையிடல்-மலை ஆறு தோப்புமசானம்இவ்விடங்களிற் சஞ்சரித்தல்-வாத்தியகோஷம்-மேககர்சனை இவைகளிற் பிரீதி-மயக்கம்-தலைசுற்றல்-உரத்த சத்தம்-தேகம் குலுங்க நகைத்தல்-உதட்டையும்-பல்லையும் கடித்தல் இக்குணங்களுண்டாகும்.

### அசாந்திய பூதம்.

மனக்கலக்கம், நிருவாணம் பொல்லாக்கோபம், தானே பேசுதல், வலியசண்டை, விக்கிரகத்தை உடைக்கப்போகுதல்,மனைவிவெறுப்பு, தலைவிரிக்கோலம் இக்குணங்களுண்டாம்.

### சகுமல பூதம்.

சாப்பாடு அதிகஞ்செல்லல் குரல்-கம்மல்-பலரையுங் கூப்பிடுதல்-வாயில்வந்தபடி உளறல்-பயப்படாதவைகளுக்குப் பயப்படல்-சதா சிரித்தல்-அழுதல்இக்குணங்களுண்டாம்.

### பித்த பூதம்.

மூத்திரத்தைக் கையிற் பிடித்தல், மலத்தை பிசைத்தல், நிருவாணமாக அலைதல், பண்டைவார்த்தை, சேஷ்டை, கல்லாலடித்தல், சோம்பலின்மை, துரும்பைக்கிள்ளல், துணியைக்கிழித்தல் இக்குணங்களுண்டாம்

### விசாக பூதம்.

நிரைதுவாக அழல், பயங்கரமினமை, யாவரையும் தூஷித்தல், நகைத்தல் பூமியை உதைத்தல், மெல்லியவார்த்தை இக்குணங்களுண்டாகும்.

என்று இவ்விதமாகக்கூறிய முப்பத்துமூன்று பூதபேதங்களில் யாதாமொருபூதம் யாதொரு மனிதர்களைப் பீடிக்கின் சிலகாலத்திற்குள் மரணம் நேர்ந்துவிடும் என்பது திண்ணமொழியாம். இவைகளை நீக்குவதற்கு வகை மருந்தே பிரதானமாகும். இதை இப்புத்தகத்தின் இரண்டாம்பாகத்திற்காண்க.

## சகலதோஷக் குறிகள்.

முற்றிற்று.

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★ 1771
MAHAMAHOPADHYAYA DR U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS 41